விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினாறு

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 17 வெள்ளிக்கிழமை (02.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 257


# ஒருலட்சம் மக்கள் திரண்டெழுந்து கிளிநொச்சியில் பிரகடனம் வெளியீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரண்டு மேற்கொண்ட, தமிழீழமே எங்கள் மூச்சு என்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம் நேற்று மிகுந்த எழுச்சியுடன் இடம் பெற்றது.

கடந்த யூலை மாதம் 27ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த்தேசிய பேராளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்தி இப்பிரகடன நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

மாலை 4மணியளவில் கிளிநொச்சி பொது மைதானத்தில் மக்கள் இதற்காக அணிதிரண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரினை மாவீரர் மேஜர் விமலின் துணைவியார் திருமதி தமிழ்ச்செல்வி சண்முகநாதன், மாவீரர் மேஜர் கமல் அவர்களின் தந்தையார் முத்துச்சாமி அருணாசலம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.



தமிழீழத்தேசியக்கொடியினை மாவீரர் கப்டன் வண்ணன் அவர்களின் தந்தை முத்துவேல் சீவரத்தினம் ஏற்றிவைத்தார்.

நிகழ்வின் எழுச்சி சுடர்களை சு.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி பிரதேசங்களின் தேசிய எழுச்சிப் பேரவைகளின் செயலாளர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து எழுச்சியரங்கு இடம் பெற்றது. தலைமை உரையினை கிளிநொச்சிய மாவட்ட தமிழ்த்தேசிய எழுச்சிச் செயலணித்தலைவர் திருச்செல்வம் பிரபாகரன் நிகழ்த்தினார்.

யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தின் ஆசிச்செய்தியினை கிளி. முல்லை.குருமுதல்வர் பேணாட் அடிகளார் வாசித்தார்.

யாழ்ப்பாணம் மக்கள் பணிமனைச் செய (16 ஆம் பக்கம் பார்க்க)


# எமது இறைமைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்

## கிளிநொச்சிப் பிரகடனத்தில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திரவாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழித்தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு கிளிநொச்சியில் நேற்று வெளியிடப்பட்ட கிளிநொச்சிப்பிரகடனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூரானுக்கு இன்று தேர். காலை 7மணிக்கு முருகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

# நேரடிப்பேச்சு வார்த்தைகளை கிளிநொச்சியில் நடத்த முடியாது

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான நேரடிப்பேச்சுவார்த்தைகளை கிளிநொச்சியில் நடத்தப்படவேண்டுமென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கையினை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அரசாங்கம் என்ற வகையில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகம் அமைந்துள்ள கிளிநொச்சியில் பேச்சுக்களை நடத்த எதிர்ப்புத் தெரிவிப்பதாக அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா விடுத்த அமைதிப்பேச்சுக்கான அழைப்பை விடுதலைப்புலிகள் உடனடியாக ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் அவர்கள் பேச்சுக்களை முதலில் நோர்வேத்தலைநகர் ஒஸ்லோவில் நடத்தவேண்டுமென கூறி (16 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நல்லூர் ஆலயச் சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடைபெற்றுவரும் 'கந்த புராணம்' தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று மாலை 6.00 மணிக்கு கான கதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா "சூரசங்காரம்' என்ற பொருளில் இசைச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

⏩ ⏩ ⏩

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு பாட்டு எ.கே.கருணாகரன், வயலின் சியாமளாங்கி கருணாகரன், மிருதங்கம் டானியல் வரதராஜன், கெஞ்சிரா கே.அனந்தகோபன் ஆகியோரின் இசைநிகழ்வு இடம் பெறவுள்ளது.

⏩ ⏩ ⏩

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இரதோற்சவம், தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு இசை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

இதில் இரதோற்சவமான இன்று காலை 9.00மணிக்கு ஆதீன கலாமண்டபத்தில் ஆதீன இசைவகுப்பு மாணவர்களின் குழுப்பாடலும், வி.பரமசாமி, சியாமளாங்கி கருணாகரன்,குணபூஷணம் நாகராசா, மதுரா-வரதராஜ சர்மா, எஸ்.நாகராசா, திவ்யமணி மகாலிங்கம் குழுவினரின் இசைக் கச்சேரியும், பார்வதி சிவபாதத்தின் பக்திப்பாடலும், சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் குழுவினரின் வில்லிசையும் இடம் பெறவுள்ளது. (ந-9)

# மண்ணில் நல்லவண்ணம் வாழ மரகத மயில்வாகனன் பாதம் பணிவோம்

சிவபூமி எனப் போற்றப்படும் ஈழவள நாட்டில் கந்தபுராண கலாசாரம் மிக்க யாழ்ப்பாணத்தில் சைவமும் தமிழும் மணம்பரப்பும் நல்லைப்பதியில் முருகப்பெருமான் அலங்காரக் கந்தனாக வீற்றிருந்து அருளாட்சி புரிகிறார்.

நேரந்தவறாத ஒழுங்கான பூசைகள், வானளாவிய அழகிய கோபுரம், இனிய நாதம் தரும் கண்டாமணி, கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை போன்ற கலையம்சம் மிக்க ஆலயம் அலங்காரக் கந்தனுக்கு என்று தனித்துவமாக அமைந்த அழகு மிகு ஆலயம்தான் நல்லூர்க்கந்தன் ஆலயம்.

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு- அதனால் நாட்டில் உள்ள பிணிகள் ஓடும்" என்றார் தவயோகி சிவயோக சுவாமிகள். "எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே" என்றும் "நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய் நல்ல மனதோடு நாம் கந்தனை வணங்கினால் எங்கள் சிந்தை தெளியும்" என்றும் ஞானிகள் எங்களுக்கு நல்வழிகாட்டியுள்ளார்கள்.

நல்லைக்கந்தன் தேர்த்திருவிழாவானது மகோன்னதமான உற்சவம் என்று சொல்லப்படுகின்ற மஹோற்சவத்தின் சிகரமாக அமைகிறது. நல்லைக்கந்தன் தேர்த் திருவிழா என்றால் யாழ்ப்பாணச் சைவத்தமிழ் மக்களின் உள்ளத்தில் உற்சாகமும், மகிழ்ச்சியும், தெயவீக உணர்வும் பொங்கி எழும். மற்றைய திருவிழாக்களுக்கு வருகை தராத பக்தர்களும் தேர்த் திருவிழாவன்று வருகை தருவார்கள். நல்லைக்கந்தன் தேர்த்திருவிழா சைவத்தமிழ் மக்களின் தேசிய திருவிழா, சைவசமயத்தின் எழுச்சிவிழா, சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் உயர் விழாவாகும்.

பிரபஞ்ச சிருஷ்டிகள் அனைத்தும் தேரில் அடங்கிக்காட்சி அளிக்கும் "இப்பிரபஞ்ச இயல்பைத் தேர்ந்து கொள்" என்ற சிறந்த அறிவுறுத்தலைக் காட்டி நிற்பது தேர். அசைகின்ற ஆலயமாக, நடமாடும் மரச்சிற்பமாக உயர்ந்த கலைச்செல்வமாக திருத்தேர் விளங்குகின்றது.

வள்ளி.தெய்வானை சமேதராக தேரேறி வரும் நல்லைக்குமரனின் அழகுக் காட்சியைக்கண்டு விட்டால் உள்ளத்து அழுக்குகள் எல்லாம் நீங்கி உள்ளம் அழகு பெறும்.

நல்லைக் கந்தன் திருத்தேர் வடம்பிடிப்பது என்பதே பெரும் பேறு ஆகும். அழகும் இளமையும் மணமும் தெய்வத்தன்மையும் நிரம்பிய திருவுருவம் ஆறு திருமுகங்களுடைய பன்னிரண்டு திருக கரங்களுடனும் பொலிந்து விளங்குகிறது. அந்த ஈராறுகைய ழகனின் மிகச் சிறந்த நாமத்தை முருகா என உள்ளத்தினால் நினைந்து போற்றித் திருத்தேர் வடம்பிடித்து இழுப்பவர்களுக்கு நிறைவான செல்வங்கள் கிடைக்கும்.

நல்லூரான் தேரடி மிகவும் சிறப்பு வாய்ந்தது. தவயோகி செல்லப்பா சுவாமிகளின் திருப் படைவீடு சிவயோக சுவாமிகளின் சிவயோகப் பட்டறை ஞானத்தின் திருவுருவான இவ்விருவரும் நல்லைக்கந்தன் திருவருளால் பல ஆன்மீக உண்மைகளை உணர்ந்தார்கள்.

முருகப் பெருமானை விரும்பி வழிபடும் அடியவர்கள் காதலால் கண்ணீர் மல்கி, உடல் புளகம்! பெற்று பேரானந்தம் மெனமேலும் பெருக கந்தா! குமரா! சரவணபவ! கார்த்திகேயா! என்றும் "முருகனுக்கு அரோகரா" என்றும் அன்புருகி நிற்க முருகன் புகழ்கூறும் பஜனைப் பாடல்களைப் பக்தர்கள் மெய்யன்புடன் பாட, நல்லைக் கந்தா நீயே துணை என்று அடியழித்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும் முருகப் பெருமானின் தேரைப் பின் தொடர்ந்து செல்ல சரண் புகுந்தோம்! எமைக் காப்பாய் என்று காவடியை ஏந்தி வரும் ஏராளமான அடியவர்கள் திருவீதி வலம்வர தவில், நாதஸ்வர இசைமழை பொழிய பக்தர்களின் அன்பு வெள்ளத்தினால் மிதந்து தேரேறி வருகிறார் நல்லைக்கந்தன்.

**சைவப்புலவர் சி.நந்தகுமார**

தேரேறி வரும் நல்லைக்கந்தனை கண்குளிர மனங்குளிரத் தரிசித்து, எங்கள் இடர்களைப் போக்கவும், நாட்டில் அமைதியும், சாந்தியும் நிலவிடவும், தீய குணங்களைப் போக்கவும், சகல செல்வங்களைப பெற்றுக்கொள்ளவும் வேண்டிப் பிரார்த்தித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம். □

# அல்வாயில் அடாவடித்தனம் 50ற்கு மேற்பட்ட வீடுகள் நாசம்

(துன்னாலை)

வடமராட்சி அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடிப் பகுதியில் உள்ள அல்வாய் வடக்கு, மகாத்மாவீதிப் பகுதியில் சுமார் 50ற்கு மேற்பட்ட வீடுகள் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, கடந்த 28ஆம் திகதி இரவு புலோலி மாயக்கைப் பகுதியில் வியாபாரி மூலை வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த த.குணசீலன் (வயது-30) என்ற இளைஞன் இரவில் மோட்டார் சைக்கிளில் சென்றவேளை வீதிக்கு குறுக்கே தடைஏற்படுத்தி தாக்கியதில் மரணமானார் இதனால் கொதிப்படைந்த அவரது உறவினரும், ஊராரும் கடந்த திங்கட்கிழமை மாலை சுமார் 600 பேர் வரையில் சென்று ஹனடர், ஓட்டோ வாகனஙகளில் படையெடுத்து வந்து அல்வாய் வடக்கு மகாத்மாவீதி கிராமத்துக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர், தாக்குதலின் போது 50ற்கு மேற்பட்ட வீடுகள் பெற்றோல் குணடுத் தாக்குதலில் தீக்கிரையானது. 24 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலானது. 157பேர் வீடுகளை இழந்து நிர்க்கதியாகினர்.

தாக்குதலில் பெற்றோல் குண்டுகளும், வாள், கொட்டன், மண் நிரப்பப்பட்ட போத்தல்கள் எனப் பல்வேறு ரகமான ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது பலர் தாக்குதலுக்குள்ளாகி காயமுற்றனர். அவர்களில் சண்முகலிங்கம் சுபதீஸ் (வயது-19), இரத்தினசிங்கம் சதீஸ்(வயது-16) ஆகியோர் வல்வெட்டிததுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். வைரமுத்து இராசரத்தினம்(வயது-39) என்ற 9 பிள்ளையின் தந்தையும் காயமுற்றுள்ளார்.

இது இவ்வாறிருக்க பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சொத்துக்களை இழந்து வீதிகளிலும் மரங்களுக்கு கீழும் தங்கியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் சி.வசந்தகுமார், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை போராளிகள் எனப் பலரும் நேரில் சென்று பார்வையிட்டு விபரங்களைத் திரட்டும் பணியிலும் அவசர உதவிப் பணியிலும் ஈடுபடுகின்றனர். தமிழர் புனர்வாழ்வுக் கழககம் தற்காலிக கூரைவிரிப்பு கூடாரங்களை அமைத்து வருகின்றனா.

தாக்குதலை நடத்தியவர்களுக்கும் தாக்கப்பட்டவர்களுக்கும மோதல் தொடங்க என்ன காரணம் என்ற தகவலும் வெளிவந்துள்ளது. அல்வாய் முத்துமாரி அம்மன் திருவிழாவின்போது இசை நிகழ்ச்சியொன்று இடம் பெறற வேளையில் உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருத்தி நாவலடிப் பகுதி இளைஞர்களுடன் தகாதமுறையில் நடந்து கொண்டிருந்ததாகவும் அவ்வேளை அப்பகுதி இளைஞர்கள் சிலர் அதுபற்றி எச்சரிக்கை செய்ததாகவும் அதனால் இரு பகுதிக்கும் கோஷ்டி மோதல் ஏற்பட்டதாகவும் அதுவே இப்போது ஊர்மோதலாகவும், பிரதேச மோதலாகவும் உருவெடுத்ததாகவும் அறியப்படுகிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி தாக்குதலில் ஈடுபட்ட பலரின் பெயர்கள் பெறப்பட்டுள்ளது. அதில் தாடிச்சிறி என்பவரே தலைமை தாங்கியதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக பொலிஸாரால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் சம்பவ இடத்திற்கு பொலிஸார் வரவே இல்லையெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-101)

## இராசி பலன்

**02.09.2005**
**(ஆவணி 17,வெள்ளிக்கிழமை)**
**சதுர்த்தசி முன்னிரவு 11.01 மணிவரை**
**ஆயிலியம் பிற்பகல் 3.06 மணிவரை**
**இராகுகாலம் 10.35 - 12.05 மணிவரை**
**சுபநேரம் 6.05-7.35 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், ரோக நிலை, தாய் வழி உறவு, வேலைச் சுமை. |
| இடபம் | மனோ தைரியம், எடுத்த கருமங்கள் கைகூடும், பிரயாணம், சகோதரர் உதவி. |
| மிதுனம் | ரோகநிலை, முயற்சி தாமதம், கடின வார்த்தை, அதிக செலவு. |
| கடகம் | சயன சுகம், வெகுமானம், போசன சுகம், காரிய அனுகூலம். |
| சிங்கம் | சோம்பல் நிலை, தன விரயம், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| கன்னி | ஆனந்தம், புதிய பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம், உறவினர் உதவி. |
| துலாம் | ஆரோக்கியம், இஷ்ட சித்தி, போசன சுகம் பெருமையடைதல். |
| விருச்சிகம் | சரீரப் பிரயாசீச, கட்டுப்பாடு, உடல்நலக் குறை, திடீர் பயணம். |
| தனுசு | முழங்கால் வலி, காரியதாமதம், தெய்வ சிந்தை, பொருள் விரயம். |
| மகரம் | தேக நலன், சயன சுகம், பிரயாணம், தெய்வ தரிசனம். |
| கும்பம் | காரிய அனுகூலம், பொருள் சேர்கை, மாதர் நட்பு, சுப செய்தி. |
| மீனம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பொருள் விரயம், வியாபார நன்மை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிக்கப்படும் இடங்கள்

(கிளிநொச்சி)

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு-2005 கீழ் வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நடைபெறவுள்ளது.

2004ஆம் ஆண்டுவரை மீளளிப்பதற்குத் தெரிவு செயயப்பட்டோரில் இதுவரை மீளப் பெறாதோரும் ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் மீளப் பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

**யாழ்.மாவட்டம்**

இடம்:- முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.

நேரம்:- காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை

நாள்
09.09.2005 (வெள்ளி) } நல்லூர்
10.09.2005 (சனி) }
11.09.2005 (ஞாயிறு) - யாழ்ப்பாணம்
12.09.2005 (திங்கள்) - கோப்பாய்
13.09.2005 (செவ்வாய்) - உடுவில்
14.09.2005 (புதன்) - மானிப்பாய்
16.09.2005 (வெள்ளி) - தெல்லிப்பளை
17.09.2005 (சனி) - சங்கானை
18.09.2005 (ஞாயிறு) - கரவெட்டி
19.09.2005 (திங்கள்) - பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு
20.09.2005 (செவ்வாய்) - சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி
21.09.2005 (புதன்) - வேலணை, காரைநகர்

**வன்னிப்பகுதி**

23.09.2005 (வெள்ளி)

மாங்குளம் மகாவித்தியாலயம் - மாங்குளம் - காலை 8.00மணி
வருவாய்ப் பகுதிச் செயலகம் - புளியங்குளம் - மு.ப.9.00மணி
அக்கராயன் மகாவித்தியாலயம் - அக்கராயன் - பி.ப.1.30 மணி
கிளி.மத்திய கல்லூரி - கிளிநொச்சி - பி.ப.3.30 மணி

24.09.2005 (சனி)

பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம் - பூநகரி- காலை 8.30மணி
முழங்காவல் மகாவித்தியாலயம் - முழங்காவில் - மு.ப.9.30மணி
விடத்தல்தீவு றோ.க.பாடசாலை - விடத்தல்தீவு - மு.ப.11.00மணி
கறுக்காயன் குளம் அ.த.க.பாடசாலை - கறுக்காய்க்குளம் - பி.ப.12.40மணி
வருவாய்ப்பகுதிச் செயலகம் - மல்லாவி - பி.ப. 5.30 மணி

25.09.2005 (ஞாயிறு)

நெடுங்கேணி மகாவித்தியாலயம் - நெடுங்குளம் - மு.ப.9.30மணி
ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் - ஒட்டுசுட்டான் - மு.ப.10.30 மணி
வித்தியானந்தாக் கல்லூரி - தண்ணீரூற்று - ந.ப.12.00 மணி
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய - புதுக்குடியிருப்பு - பி.ப.2.30 மணி
விசுவமடு மகாவித்தியாலயம் - விசுவமடு - பி.ப.4.00 மணி (ந)

# சமாதான முயற்சிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் சவால்களாக பாரிய பிரச்சினைகள் -ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

நாட்டில் இன்று பாரிய பிரச்சினைகள் சமாதான நடவடிக்கைகளுக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கும் சவால்களாக தோன்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

றுகுணு மக்கள் கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க,

"நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும். நாட்டின் இறைமை காக்கப்பட வேண்டும். பொருளாதாரம் கட்டியெழுப்பப்படவேண்டும்.

இது தற்போதுள்ள அரசாங்கத்தால நூற்றுக்கு பத்து வீதம் கூட செய்ய முடியவில்லை. ஆனால் எம்மால் செய்ய முடியும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை நடைமுறைப்படுத்திய எங்களால் சமாதானத்தை ஏற்படுதத வெகுநாட்கள் செல்லாது" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய றுகுணு மக்கள் கட்சியின் தலைவர் அஜந்த சொய்ஸா வடக்கு கிழக்கின் இனப்பிரசசினைக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே தீர்வினைக் காண முடியும் எனத தெரிவித்தார். (ற-4)

## குடிநீர் பவுசரை வழிமறித்த மக்கள்

(புங்குடுதீவு)

வட இலங்கை சர்வோதய குடிநீர் பவுசரினை கடநத 22ஆம் திகதி அன்று காலை 9.30 மணியளவில் குடிநீருககு என காத்திருந்த மக்கள் குடிநீரினை தங்களுக்கும் தந்துவிட்டு செல்லுமாறு கேட்டவேளை தாங்கள் ஓடருக்கு வழங்க கொண்டு செல்கின்றோம் என கூறியமையால் புங்குடுதீவு மடத்துவெளி பகுதியில் கூடிநின்ற மக்கள் பவுசரை மேலே கொண்டு செல்ல விடாது வழி மறித்தனர்.

வடஇலங்கை சர்வோதய பவுசர் மூலம் குடிநீரினைப் பெறுவதற்கு காத்து நிற்கும் மக்கள் இவ்வாறு பலமுறை குடிநீர் பெறுவதற்கு முயற்சி செய்த வேளைகளில் இவ்வாறான வார்த்தைகளைப் பிரயோகம் செய்தமையால் பவுசரினை வழிமறித்துள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பவுசரை ஓட்டி வந்த சாரதியும், கிளினரும் உடனடியாக வட இலங்கை சர்வோதயத்துக்கு சென்று இச்சம்பவம் பற்றி தெரியப்படுத்தியதையடுத்து பொறுப்பதிகாரி நேரில் அங்கு சென்று அப் பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்கியதன் பின்னரே குடிநீர் பவுசர் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது. (து-126)

## கல்விச் சுற்றுலா

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பட்டிப்பளை, செங்கலடி, வெளதீவு பிரதேச செயலர் பிரிவு மீனவ சங்க பிரதிநிதிகள் குழு 3 நாள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு அண்மையில் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாண மீனவ சங்கங்களின் நிர்வாக கட்டமைப்பு, தொழிற்பாடு பற்றி அவதானித்து கலந் துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த 27ஆம் திகதி அன்று யாழ மாவட்ட மீன்பிடி பணிப்பாளர் பணிமனை, காரைநகர், சுழிபுரம் மனவ சங்க பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (து)

## பண் இன்னிசைக் கோஷ்டி

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ கால தீர்த்த திருவிழா அன்று தேவாரப் பண் இன்னிசைக் கோஷ்டி வீதி உலா நடாத்துவது வழக்கம்.

இவ்வருடமும் நாளை காலை 7.00மணிக்கு கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் ஸ்ரீ விநாயகர் தேவஸ்தானத்திலிருநது மன்றத் தேவாரப் பாடசாலை மாணவர்களின் தேவாரப் பண். இன்னிசைக் கோஷ்டி வீதி உலாவாகப் புறப்பட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை வலம்வரும்.

ஆலயத்தில் பல திருமுறை விற்பன்னர்கள் பங்குபற்றிச் சிறப்பிப்பார்கள். (ற)

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைஎதிர்த்து நேற்று முன்தினம் கொழும்பில் இரண்டு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை நாட்டை கட்டியெழுப்பும் உரிமைகளுக்கான தொழிற்சங்க மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 42 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிய போதும் அதற்கான தீர்வை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு ஏறப 70வீத சம்பள அதிகரிப்பை வழஙக வேண்டுமென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது கோஷம் எழுப்பினர். அதேவேளை வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கண்டித்து அரச நிர்வாக அமைச்சுக்கு முன்பாக மற்றுமொரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை அனைத்து இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். (ற-8)

## அரச பாடசாலை அதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை ஒக்.இல்

(கொழும்பு)

அரசாங்க பாடசாலை அதிபர்களுக்கான 2005ஆம் ஆண்டுக்கான தடைதாண்டல் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெறவிருப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்கள் இந்த தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

45வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இத் தடைதாண்டல பரீட்சையிலிருந்து விலக்களிக்க முடியுமென்ற விதிமுறை ஏற்கனவே ரத்து செய்யப்பட்டிருப்பதினால் அதிபர் சேவையைச் சேர்ந்த அனைத்து அதிபர்களும் இந்தப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் அதிபர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பரீட்சைத் திணைக்களத்துக்கு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதியாகும். இந்தப் பரீட்சை தொடர்பான முழுமையான விபரங்கள் கடந்த மாதம் 26ஆம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவிததலில் வெளியிடப்பட்டுள்ளது. (ற-8)

## செயன்முறை பரீட்சை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2.30க்கு நடைபெற இருந்த சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணததினால் இடம்பெறமாட்டாது.

இப்பரீட்சைக்குரிய திகதிகள் பின்னர் அறியத்தரப்படும். எனினும் அணறைய தினம் எழுத்துப் பரீட்சைக்கு திகதி பெற்ற பரீட்சார்த்திகளுக்கு எழுத்துப் பரீட்சை நடைபெறும் என்று யாழ்மாவட்ட மோட்டார் போக்குவரதது திணைக்களம் அறிவித்துள்ளது. (ற)

## உத்தியோகபூர்வ அறிக்கையை மஹிந்தவே வெளியிடுவாராம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையினை கட்சியின் வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவே வெளியிடுவார் என கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவ் உத்தியோகபூர்வ அறிககை எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்கிழமை கட்சியின் 54ஆவது வருடாந்தக் கூட்டத்தில் வெளியிடப்படும் என நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகமாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ் அறிவித்தலானது நாட்டின் நலனை மையமாகக் கொண்டதாகவே அமையுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மங்கள சமரவீர,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்கனவே இணைக்கட்சிகளை இணைத்துக் கொண்டு ஜனாதிபதித் தேர்தல் முனைப்புகளை மேற்கொண்டு வருகிறது.

எமது கட்சியின் தேர்தல் பிரசாரமானது வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து நாட்டைக் காப்பதாக அமையும் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

## விளம்பரங்களால் மறைக்கப்படும் வீதி வழிகாட்டிக் கற்கள்

(பொன்னாலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள வீதி வழிகாட்டி (கிலோ மீற்றர்) கற்களில் விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவதால், வீதிப்போக்குவரத்துக்களின் போது, வீதிகளை இனங்காண முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி வழிகாட்டிக் கற்களில் தனியார் கல்வி நிலையங்கள், திரையரங்குகள், ஆலயங்கள் போன்றவற்றின் விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

இவை தவிர கண்ணீர் அஞ்சலி, தேர்தல் சுவரொட்டிகள் என்பனவும் ஒட்டப்பட்டு வருகின்றன. இதனால் குறித்த கற்களில் எழுதப்பட்டிருக்கும் இடங்களின் பெயர்கள் மறைக்கப்படுகின்றன.

நீண்ட இடைவெளிகளின் பின், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களும், உள்ளூர்களில் தூர இடங்களமற்றும் வெளிமாட்டங்களில் இருந்த வருபவர்களும் இதனால் பாதைகளை இனம் கண்டு கொள்வதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைத் தவிர்க்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தபபட்டுள்ளது. (ற-49)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்ற செயலாளருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு சிவன் பண்ணை வீதி, யாழப்பாணத்தில் உள்ள யாழ்மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 2005ஆம் ஆண்டிற்கான உள்ளூராட்சி வார நிகழ்வு சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-47)

## யுத்த நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்தினால் 30 ஆண்டு சிறைத்தண்டனை

(கொழும்பு)

யுத்த நடவடிக்கைகளில் சிறுவர்களை பலாத்காரமாக ஈடுபடுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்று இயற்றப்படவுள்ளதாகவும் இதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் நீதி அமைச்சின் மேலதிக செயலாளர் தாரா விஜேதிலக தெரிவித்துள்ளார்.

இச் சட்டத்தின் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம், ஆட்கடத்தில் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு 20 வருட கால சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்த நடவடிக்கையில் சிறுவர்களை ஈடுபடுத்துவோருக்கு 30 வருட சிறைத தண்டனை விதிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (து-7)

## தெஹிவளையில் 28 பேர் கைது

(கொழும்பு)

தெஹிவளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது 28பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ் இளைஞர்கள் உட்பட சட்ட விரோதக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களும் சிறு குற்றங்களில் ஈடுபடுவோரும் இருப்பதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-2)

## சுனாமி பாதித்த பிரதேசங்களில் வாக்களிக்க தற்காலிக கொட்டில்கள்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தற்காலிக கொட்டில்களை அமைத்து தேர்தல் வாக்களிப்பு நிலையங்களை ஏற்படுத்த தேர்தல் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

முன்னைய தேர்தல்களில் தேர்தல நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள் ஆழிப்பேரலையால் அழிந்து போனதால் இத்தகைய மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தேர்தல் ஆணையாளா தயானந்த தசநாயக்கவின் தலைமையில் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர்களும் கூடிந்து கொண்ட கூட்டத்தில் இந்த விடயம் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களையும் தெரிவத்தாட்சி அலுவலகர்களையும் தனியே அழைத்து அந்த பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதறகு தேர்தல் ஆணையாளா தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, நாடு முழுவதும் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்கள் குறித்து ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தெரிவத்தாட்சி அலுவலகர்களுக்குக் கூறியுள்ளார். அத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் வாக்காளர் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதா என தனக்கு அறியத்தருமாறும் கேட்டுள்ளார். (ச-4)

## மலையகத் தமிழருக்கு எதிரான சட்டங்களை வலுவிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(கொழும்பு)

மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்துச் சட்டங்களையும் பாராளுமன்றத்தினூடாக வலுவிழக்கச் செய்வதற்கு மலையகத் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் ,எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஹட்டனில் மலையக அரசியல் கட்சிகள், தொழிற்சங்க சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கருத்தரங்கு ஒன்றிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள மலைய பெருந்தோட்ட தமிழ் மக்களைப் பாதிக்கின்ற வகையிலான சட்டங்களைக் காலத்தின் தேவை கருதி வலுவிழக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாக கட்டமைப்பின் கீழ் பெருந்தோட்டப் பகுதிகளையும் கொண்டு வருவதற்கு அரசியல் யாப்பில் மாற்றம கொண்டு வரவேண்டும.

அதற்காக மலையகத்தில் இருந்து தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆலோசனைகள் அக்கருத்தரங்கில் முன்வைக்கபபட்டிருந்தன. (து-9)

## தடுத்து வைப்பு

கட்டுநாயக்க வானூர்தி தளத்தினூடாக இலங்கைக்கு வந்த யாழ்ப்பாண பிரஜை ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனேடியக் கடவுச் சீட்டை வைத்திருந்த இவர், சுமார் ரூபா 30 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளை தமமுடன் எடுத்து வந்ததாகக குற்றம சுமத்தப்பட்டுள்ளது. (ற-2)

## கனேடிய தமிழ் வானொலியில் நல்லூர் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள்

### முதல் முறையாக நேரடி அஞ்சல்

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று நடைபெறுகின்ற தேர் உற்சவ நிகழ்வுகளை கனேடிய தமிழ் வானொலியில் மதுரகவி காரை. எம்.பி அருளானந்தன் நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளார்.

உலகிலே முதன் முதல் ஆரம்பமான கனேடிய தமிழ் வானொலி 24மணி நேரமும் தமிழ் நிகழ்வுகளை ஒலிபரப்பி வருகின்றது.

இன்றைய தேர் உற்சவ நிகழ்வுகளையும் சிறப்பாக நல்லூரிலிருந்து ஒலிபரப்பவுள்ளதென்பதை கனேடிய தமிழ் வானொலியின் பணிப்பாளர் கந்தையா சிவசோதி (இளையபாரதி) தெரிவித்துள்ளார். (ற)

## படகுத்துறை ஆழமாக்கல்

வல்வெட்டித்துறை ஊறணி படகுத்துறை கனரக வாகனத்தின் மூலமாக ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

சுனாமிப் பேரலையால் துறை தூர்வடைந்தமையால் மீன்பிடி படகுகள் நிறுத்துவதற்கேற்ற வகையில் ஆழமாக்கப்பட்டு சீர்செய்யப்பட்டு வருகின்றது. (ற-21)

## இன்று ஒரு தகவல்

# விலங்குகளின் பண்புகள்

காலையில் எழுந்து கொஞ்சத் தூரத்திற்கு நடந்து செல்கிறீர்கள். கொஞ்சத்தூரம் நடந்த பின்பு திரும்பி வருகிறீர்கள். இது ஒரு சாதாரண விடயம் தான்.இருந்தாலும் உங்கள் வீடு உள்ள இடத்தைச் சரியாகக் கண்டுபிடித்து வந்து சேர்கிறீர்களே அது எப்படி?

ஒரு மனிதன் தனது வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் போது சில அறிமுகமான கட்டடங்கள், சாலைத் திருப்பங்கள்,மரங்கள்,தெருவின் அமைபபுப் போன்ற விபரங்களைத் தன்னுடைய நினைவிலிருந்து மீட்டுப் பரிசீலனை செய்து தான் சேர வேண்டிய இடம் வந்துவிட்டது என்பதைப் புரிந்துகொள்கிறான். சில் வீட்டாருடன் கோபித்துக் கொண்டு வெளியே செல்வது வழக்கம். இவர்கள் வேறு வீதிகள், மரங்கள் போன்றவற்றை நினைவுக்குக் கொண்டுவந்து அந்த வழியாகப் போய்விடுவார்கள். இதை ஏன் சொல்கிறேன் எனறால் பட்டறிவு அதாவது அனுபவம் மூலமாகக் கற்றுக் கொள்ளும பண்புகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு என்று இதுவரையில் கூறிக் கொண்டிருந்தனர்.

சமீப காலத்தில் சில ஆய்வுகளைச் செய்து பார்த்துவிட்டு இதுபோன்ற பண்புகள் விலங்குகளுக்கும் உண்டென்று கூற ஆரம்பித்துள்ளனர். இதற்கு ஏன் அவ்வளவு தூரம் போகிறீர்கள்? ஏற்கனவே நமக்குத் தெரிந்ததுதானே.

தேனீ இருக்கிறதே அது தேன் கிடைக்கக் கூடிய இடங்களை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளும். சரியாகப் போய் தேனை எடுத்துக்கொண்டு வழிதவறாமல் தேன் கூட்டுக்கு வந்து சேர்ந்து விடும். இது எப்படி நினைவில் வைத்துக் கொள்கிறது தெரியுமா? தேனின் நறுமணம், தேன் உள்ள மலரின் வடிவம், அந்த மலர் மலரும் நேரம் இப்படி வரிசைக் கிரமத்தில் தகவல்களைச் சேகரித்து வைத்துக்கொள்ளும்.

இப்போது நாம் நாற்காலி மேசை, அலுமாரி போன்றவற்றை மரச்சாமான்கள் என்று வைத்துக்கொள்கிறோம் அல்லவா? இதேபோல புறாக்கள எல்லாம் ஒரே வடிவம் கொண்ட மரங் களை ஒரு குழுவாக வகைப்படுத்திக் கொள்ளுமாம். விலங்கு, பறவை, பூச்சி இவை யாவும் சுயேச்சையான சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்கிறது.

கடந்த பத்து வருடமாகத் தான் விஞ்ஞானிகள் இதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித் தார்கள். வலஙகுகள் நடந்துகொள்ளும் விதத்தைப் பற்றிக் கூறும் போது இரண்டு வித அணுகுமுறை உண்டு. உள்ளுணர்வு என்பது ஒன்று அதாவது **Instinct** இன்னுமொன்று பட்டறிவு அதாவது அனுபவம் **Experience** இவை இரண்டும் தனித்தனியாகப பிரிந்திருப்பதில்லை.

அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளும் திறமை மனிதனுக்கு மட்டும்தான் உண்டென்று நினைத்துக் கொணடிருந்தோம். விலங்குகளுக்கும் அந்தத் திறமை உண்டென்பது இப்போது தெரிந்திருக்கிறது.

ஒரு விலங்கிற்கு தான் உயிர் பிழைத்து வாழ்வதற்காக, தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றபடி தனது நடத்தையை மாறறிக்கொள்ளும் திறமை உள்ளது. நடத்தைகளின் பரிணா மத்தில் மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் வித்தியாச மில்லை என்று இப்போது புரிந்துவிட்டது. பொதுவாக விலங்கு, பறவை, பூச்சி போன்றவற்றிற்கெல்லாம் பயிற்சி கொடுத்தால் கற்றுக்கொள்ளும் என்று ஓர் அடிப்படையான எண்ணம் ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தது. அது தவறாம். பரிணாம வழியாகத் தோன்றிய ஓர் உள்ளுணாவு இருத்தால் தான் ஒரு உயிரினம் ஓர் நடத்தையை மேற்கொள்ளுமாம். அந்த உள்ளுணர்வு பரிணாம வளர்ச்சியில் மரபு வழியாக வருவது ஆகக்கூடிய படைப்பில் எந்த வித்தியாசமும் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. அதன்பின் எதற்கு மனிதனுக்குள்ளே வித்தியாசம்! அகந்தையினால் வருவதுதான் இந்த வித்தியாசம்.

ஒருவர் இருந்தார். தன்னைப் பற்றி எப்போதும் பெருமையாக நினைப்பவர் அவர். இன்னொருவரைப் பார்க்கச் சென்றார். அவர் அப்போதுதான் தீவிரமாக ஒரு பூச்சியைப் பற்றி ஆராய்ச்சிக் குறிப்பு எழுதிக்கொண்டிருந்தார். “ஒரு நிமிடம் இந்த நாற்காலியில் உட்காருங்கள்.இதோ வருகிறேன்” என்றார். வந்தவருக்குக் கோபம் வந்துவிட்டது. இந்தப் பூச்சியை விட நான் என்ன மட்டமா என்று நினைத்து விட்டார். நான் யார் தெரியுமா? மிகப் பெரிய மனிதன்” என்றார். உடனே அவர் “அப்படியென்றால் இரண்டு நாற்காலியில் உட்காருங்கள்” என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஏகாதிபத்திய சொருபத்தை இப்போதே வெளிப்படுத்தும் ரணில் -சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க இப்போதே தனது ஏகாதிபத்திய சொருபத்தை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளார் என மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சாடியுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டணி அரசாங்கத்தின் ஊடகவியலாளர் மகாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணிலைப் போலன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ தெளிவான கொள்கையுடையவர். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் தான் பதவிக்கு வந்தால் 15 வருடங்கள் இருக்கப்போவதாகத் தெரிவிக்கிறார்.

பொதுவாக ஜனாதிபதியாகப் பதவியேற்கும் ஒருவரின் பதவிக் காலமானது 6 வருடங்களாகும். அவர் மீண்டும் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் மேலும் 6 வருடங்கள் என மொத்தம் 12 வருடங்களே பதவியில் இருக்க முடியும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க தான் 15 வருடங்கள் பதவியில் இருக்கப் போவதாகக் கூறுவதனை மக்கள் கேலியாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறான நிலைமை மிகவும் பயங்கரமானது. ஏனெனில் கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களில் இவாகள் மோசடி செய்துள்ளதுடன், வன்முறைகளிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார். (ற-4)

# சந்திவெளி இளைஞர்களின் படுகொலையுடன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குத் தொடர்பு

## சுட்டிக்காட்டுகிறார் ஜெயா. எம்.பி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் களுத்துறைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை மட்டு.மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பாக சந்திரிகாவிற்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

குறிதத இரு இளைஞர்களும் கட்டுநாயக்க செல்லும் வழியில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணையை அடுத்து, இரவு 11 மணியளவில் விடுவிக்கப்பட்டுளளனர். இதன் பின்னரே வெள்ளை நிற ஊர்தி ஒன்றில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளனர் என்றும் ஜெயானந்தமூர்த்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்புப் பகுதியில் வைத்து கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுக்கும் அவர்களுடன் இணைந்து இயங்கும் ஆயுதக் குழுக்களுக்கும் தொடர்பு உண்டு.

இச்சம்பவத்திற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பாகும் எனவும் குறிப்பிட்டுள்ள அவர்,இவ் விடயத்தில் தலையிட்டு உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# நிதிப்பிரச்சினையில் தேர்தல் திணைக்களம்! திறைசேரியிடம் கடன் பெறப்படும்?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் தீவிரம் காட்டி வரும் தேர்தல் திணைக்கள ஆணையாளர் நிதிச் சிக்கலை எதிர்நோக்க உள்ளதாக மூத்த அமைச்சரும் அரசு கொறடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கான நிதி தொடர்பான விவரங்களை பாராளுமன்றத்திற்கு அளிக்க தேர்தல திணைக்கள ஆணையாளர் தவறிவிட்டார். திறைசேரியிலிருந்து பணம் பெறுவதற்கு பாராளுமன்றம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை அவர் செய்யவில்லை.

தற்போது அவர் தேர்தலுக்கான நிதியைக் கோரினாலும அடுத்த பாராளுமன்றக் கூட்டம் தொடங்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை காத்திருக்க வேண்டிய நிலைமை உள்ளது.

தேர்தல் பணிகளை முன்னெடுக்க தேர்தல் திணைக்கள ஆணையாளருக்கு தற்போது உள்ள ஒரேவழி திறைசேரியிடமிருந்து அவர் கடன்பெறுவது தான்.

இதனிடையே உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் கடந்த செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார்.


நேற்று முன்தினம் வெளியிடப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வார இறுதியிலதான் வெளியாகும என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

புதிய தேசிய அடையாள அட்டை வழங்குதல், முஸ்லிம் களின் ரம்ழான் நோன்பை பாதிக்காத வகையில் தேர்தல் பணிகள், செலவினக் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நேற்று முன்தினம நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டப்படி வேட்புமனுத் தாக்கல் முடிந்து 40 முதல் 65 நாட்கள் இடைவெளிக்குப் பிறகுதான் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்.

நவம்பர் 2ஆம் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறக்கூடும் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-4)

# 4 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி யாழில் ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம்






(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.ஊடகவியலாளர்கள் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று அடையாள எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

இப போராட்டம் நேற்றுக் காலை 10.30மணி தொடக்கம் 11.30மணிவரை யாழ்.பஸ்நிலையம் முன்பாக நடைபெற்றது.

ஊடகவியலாளர்கள் நிமலராஜன், நடேசன், சிவராம் படுகொலைகள் தொடர்பாக முடக்கி வைக்கப்பட்டுள்ள விசாரணைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும், தமிழ் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும், கைதுசெய்யபபட்ட வீரகேசரி செய்தியாளர் ரமேஷ் விடுவிக்கப்படல் வேண்டும், சுடர்ஒளி மீது தொடரும் பழிவாங்கல் தாக்குதல்கள் தொடர்பாக் சர்வதேச விசாரணைக் குழு மூலம் விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே இப் போராட்டம் நடாத்தப்பட்டது.

இப் போராட்டத்தில் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஊடகவியலாளாகள கலந்துகொண்டனர். இப் போராட்டத்தில ஈடுபட்டவர்கள் “ஊடக சுதந்திரத்தை நசுக்காதே எங்கள உதிரத்தைக் குடிக்காதே”, “துப்பாக்கி முனையா உங்கள் ஊடகச் சுதந்திரம் சர்வதேசம் சிரிக்கிறது”, “கொல்லப்பட்ட எங்கள் சகபாடிகளது கொலையாளிகளை சட்டத்தின் முன்நிறுத்து”, “பத்திரிகையாளரை பயங்கரவாதிகளாக மாற்றாதே” போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். (ற-19)

அனைவருக்கும் நல்லைக் கந்தனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.








இன்றே அருகிலுள்ள
இலங்கை வங்கிக்குப்
போங்கள்
உங்கள் பிள்ளையின் சார்பில்
ரன்கெகுளு சிறுவர்
சேமிப்பொன்றை
ஆரம்பியுங்கள்.

தேசத்தின் மலர்களைப்
போன்ற தங்கமான
சிறுவர்களின்
எதிர்காலத்திற்காக தாய் /
தந்தை அல்லது அவர்கள்
மீது அன்பு
செலுத்துபவர்கள்
ஆரம்பிக்கக்கூடிய சிறுவர்
வைப்பு இதுவாகும்.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி





**ஜனஜய** ஏனைய சேமிப்பு கணக்குகளைப் போன்று சாதாரண சேமிப்பு கணக்கல்ல. சரியான திட்டமிடலுடன் சேமிக்கும் உங்களுக்கு பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுத்தரும் சேமிப்பு கணக்காகும்.

**ஜனஜய** சேமிக்கும் அதேவேளை உங்களின் எதிர்கால எதிர்பார்ப்புகள் நிறைவேறவும் உதவி புரியும்.

நீங்கள் செய்ய வேண்டியது நீங்கள் திட்டமிட்ட எதிர்காலத்தை நோக்காகக் கொண்டு **ஜனஜய**வுடன் சேமிப்பது ஆகும்.

## ஜனஜய கணக்கு மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

* கடன் உதவிகள்

வட்டுக்கடன், உங்கள் பிள்ளைகளின் கல்வி மற்றும் திருமணத்திற்கு, வியாபாரத்திற்கு வேண்டிய உபகரணங்கள் மற்றும் வாகனங்களைப் பெற்றுக்கொள்ள கடன் வசதிகள்.

* சேமிப்பு கணக்கில் ரூபா 100,000/= அல்லது அதற்கு மேல் பேணி வந்தால் பீபல்ஸ் லீசிங்கினால் இலகுவான நிபந்தனைகளுடன் லீசிங் வசதி.
* கணக்கில் ரூபா 50,000/=த்தினை ஆறு மாதங்களுக்குப் பேணி வந்தால் விமான பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் போது பீபல்ஸ் டிரவல்ஸினால் விசேட விலைக் கழிவு.
* சாதாரண சேமிப்பு கணக்குகளை விட 0.75% அதிக வட்டி.
* இலவசமாக வழங்கப்படும் ATM கார்ட் அட்டையுடன் சலுகை விலைக்கு பீபல்ஸ் வீஸா கார்ட் அட்டை.
* கணக்கில் ரூபா 50,000/=த்தினை 12 மாதங்களுக்குப் பேணி வந்தால் திடீர் விபத்துக்களின் போது ரூ.300,000 திடீர் விபத்துக் காப்புறுதி.
* மாதாந்தம் கணக்கில் ரூபா 10,000/= அல்லது அதற்கு மேல் பேணி வருவதன் மூலம் ஜய ஶ்ரீ சீட்டிழுப்பில் பணப் பரிசுகளுடன் ஆடம்பர ஜக்குவர் மோட்டார் காரை வெல்லும் சந்தர்ப்பம்.
* கணக்கில் மேலதிகமாக சேரும் ஒவ்வொரு 5000/= ரூபாய்க்கும் மேலதிக வெற்றி சந்தர்ப்பங்கள்.

விசேட பிரதிபலன்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டிருக்கும் ஜனஜய கணக்கை ரூ.2000/= த்தினை கொண்டு ஆரம்பிக்க முடியும்.

சேமிப்புடன் வாழ்க்கையில்
முன்னோக்கிச் செல்ல ஜனஜய

மக்கள் வங்கி

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

நல்லைக் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

அசல் 22 கரட் தங்க
நகைகளை எழில்மிகு
வடிவில் செய்து
பெற்றிட நாடவேண்டிய
இடம்



நியூ கார்த்திகா
நகை மாடம்
சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்

நியு கார்த்திகா நகைமாடம்
இல.06, மகாராஜா கட்டடம்,
சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.
T.P:- 0777 290816

சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்
இல. 212, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 0777148047



இன்று தேர்ப்பவனி வரும் நல்லூர்க் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

'அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்

சிறி மீனாட்சி தங்கமாளிகை

187, கஸ்தூரியார் வீதி, T.P:222 6109 யாழ்ப்பாணம்.



தேரேறிவரும் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அன்றும்! இன்றும்!! என்றும்!

இதமான புகை இன்பத்திற்கு ஆர்.வி.ஜி.பீடிகள்

ஆர்.வி.ஜி.பீடிகள் ஸ்தாபனம்

இல-58, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். T.P- 021 - 222 6806

விலையில் பெற்றுக்கொள்ள R.V.G.மெடிக்கல்ஸ்

இல-504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P- 021 - 222 2129

கந்தப் பெருமானின் அருட்கடாட்ஷம்
அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர்
தயாரிப்பிற்கான பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

ஜெகன் களஞ்சியம்

இல:285, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 - 222 5035

இன்று தேர் உலா வரும் கந்தனின் திருவருள்
அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்!

அனைத்து வகை புடவைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள கைராசியான ஸ்தாபனம்

சீமாட்டி புடவைக் கடல்



சர்வதேச கடன் அட்டைகள்
ஏற்கப்படும்

கிளைகள்:
மங்கை சில்க்ஸ்
மொடேர்ன் மாக்கற்

(இல:-15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்)
(இல.122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்)
T.P:222 2196 Fax:222 2102

தேரேறிவரும் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

எரிக்கணேஷ்



* இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
* இழந்த பற்களுக்கு நிகராக சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்
* உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்
*வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ்வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்
* விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)

கிளை இல:-
91, கே.கே.எஸ்.வீதி

எரிக்கணேஷ்

கிளை இல:-
80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்
566,564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:222 2486



# நல்லைக் குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 2005




வா! வா! சண்முகா! வடிவேல் முருகா! தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!



'மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவ சிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என்முன்னே
அரவணிசிவனாருள் பாலா பரவரமுரள் பரமதயாளா'

(சிவயோக சுவாமிகள்)

கனடா வாழ் இந்துக்கள் இன்றைய
அன்னதான உபயகாரர்

## மூத்த தம்பி அன்னதான மடம்

139, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2389





அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நல்லைக் கந்தப் பெருமானின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

◎ உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்


◎ ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



## துர்க்கா நகைப் பூங்கா

71, கன்னாதிட்டி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2228





## அண்ணா கோப்பி



## திருவிழாக்கால விற்பனை நிலையம்

நல்லூரில் நல்லை ஆதீனம் முன்பாக அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விற்பனை நிலையத்தில் ரூபா 100 கொடுத்து அண்ணா தயாரிப்புக்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்வதோடு இனாம் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.


## தேரேற வருவான் முருகன்!

காலைக் கதிரவன் இருள் ஒழிக்க எழவே
சோலைக் குயில் புள்ளும் கூவியழைக்கையிலே
மாலைக் குகந்த மணாளனாம் கந்தனவன்
வேலைத் தாங்கியே அறுமுக வடிவில் தோன்றினான்

தேரேற வருவான் முருகன் அறுமுகன் இப்
பாரண்டு அழித்தல் தொழிலதை ஆற்றவே (தேரேற)

பேரினால் புகழ் பெற்ற பெரும்பதி நல்லூரின்
தேரினில் ஏறியே சிங்கார மாய் ஆட
பாரினில் தானுமே அரும் பெரும்காட்சியென
ஊரினில் பல பேருடை ஊர் திரள

(தேரேற)

உன்திரு க்காட்சியை தேரினில் தான்காண
உன்னுவர் தேரடி நெருங்கியே சேர்ந்திட
பண்ணுவர் பாடல்கள் உன்திருப் புகழ்பாடி
சென்னி யில் நின் அடியோற்றியே வணங்கி நிற்க

(தேரேற)

நா.வரதராசா.

## நல்லூரரான் அடி தொழுதால்...



ஆளும் அழகன் நல் லூரான் அடிதொழுதால்
மாளும் உடற் பிணிகள் மாங்கி அழிந்துவிடும்

பண்ணு மிசைப் பாட லின்பும் நல்லூரான்
நண்ணிச் செவி கொண்டு நாளும் நச்சும்மே

தொண்டுப் பணிபூண்ட தூய தொண்டர்களை
அண்ட ருலகாள அமர்த்துவம் அழகனே

பத்தி முதிர்ந்த சித்தி மிக்க வித்தகரை
முத்தி கொடுத்துலுவு லகுய்க்கு முருகனே

சிவ.சண்முகவடிவேல்.

## வழிகாட்ட வா!



எழிலான நல்லைக் கந்தனே இந்நாட்டு
எல்லோரின் வாழ்விலும் வழிகாட்டு
பொழிவான மயிலேறி பழியோட்டு
புதுவாழ்வை தமிழருக்கு நிலைநாட்டு

தமிழான கடவுளே அருள் கேட்டு
தாள் களைப் பணிகிறோம் ஒளி காட்டு
அமிழ்தான தமிழிலே உன்பாட்டு
ஆக்கியே வணங்கு கிறோம் வழிகாட்டு

அருளனுசூயா

## பிணி தீர்க்கும் மருந்து

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே

சிவயோக சுவாமிகள்

## கண்கண்ட தெய்வமே!



பல்லவி

கண்கண்ட தெய்வமே கலியுகக் கந்தனே
கவினுறு நல்லூரில் காட்சி தருவான் (கண்கண்ட...)

அனுபல்லவி

பண்கொண் டடியார் பாடி மகிழ்ந்திட
[illegible]னில்வி ழாக்கொண்டு பவனியே வருவான் (கண்கண்ட...)

சரணம் – 1

விண்ணவர் தான்மகிழ வெற்றிவேல் கொண்டே
வீறுகொள் சூரரை வதஞ் செய்தவா
அண்ணலே அடியாரின் துன்ப இருளகற்றி
ஆறுமுக வேலனாய் அருள் தருவாய் (கண்கண்ட...)

சரணம் – 2

ஆறுமுகத் தழகில் ஆறுதலைத் தருவாய்
ஏறுமயி லிருந்து ஏற்றம் பல தருவாய்
நாறுமா லையணிந்து நலமே தந்திடுவாய்
தேறுதலைத் தரவே நீ தேரினில் வருவாயே (கண்கண்ட...)

எஸ்.சிவானந்தராஜா.

## நல்லை நாயகனே மயிலேறி வாராய்!

நல்லூர் வீற்றிரு
நாயகனே போற்றி
நான் முகனுக்கற
முரைத்தவனே போற்றி

தந்தைக்குபதேசம் செய்த
ஞான பண்டிதனே போற்றி
தரணியை மயிலேறியே
வலம் வந்தாய் போற்றி

கபட மற்ற உள்ள
முடையாய் போற்றி
கார்த்திகையில் உதித்த
கார்த்திகேயனே போற்றி

ஆறுமுக முடைய
முருகா போற்றி
ஐங்கரன் தம்பியே
வேலவனே போற்றி

நினைப்பவர்க்கு நிம்மதி
தருபவனே போற்றி
நின்பதம் தொழுபவர்க்கு
வரமருள்வாய் போற்றி

போற்றி போற்றி
தேரேறி வருவாய் போற்றி
வள்ளி தெய்வானையுடனே
வரமருள வருவாய் போற்றி.

K.T.பாலு.



# COOL AIR'S

GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)

* தொலைத் தொடர்பு நிலையங்கள்
* வர்த்தக நிலையங்கள்
* கணனி நிறுவனங்கள்
* காட்சி அறைகள்
* வீடுகள்

ISO 9001
தரச் சான்றிதழ்
பெறப்பட்டது

## எமது சேவைகள்



பொருத்துதல் இலவசம்
மூன்று வருட உத்தரவாதம்
(Compressor 3 years, Body 1 year)
விற்பனைக்கு பிந்திய சேவை
மூன்று மாதத்திற்கு ஒருமுறை
H.F.C வாயு பயிற்சி பெற்ற (U.N.E.P),
(N.O.U) United Nations Environment programme,
National Ozone Unit
தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள்
பரிசீலனை செய்யப்படும்.

Galanz

இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43,500/= |
| 12000 BTU | 53,500/= |
| 18000 BTU | 68,500/= |
| 24000 BTU | 88,500/= |

மேலதிக விபரங்களுக்கு:

## COOL AIR'S

இல. 151 1/4, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 788888 , 071 3080808

மேற்குறிப்பிட்ட விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே

---

அனைவருக்கும் நல்லைக் குமரனின்
அருள்வேண்டி நிற்கின்றோம்!



ஒரே கூரையின் கீழ்

1

## சிறி நதியா நகை மாளிகை

இல. 01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: சானுயா
சிறி ரூபா
நகை மாளிகை

---

அனைவருக்கும் நல்லைக் கந்தனின்
அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!



## வேணி நகை மடம்

## Veneiy Jewellery



தங்கப் பவுண் நகை வியாபாரம்

MANUFACTURERS OF GOLD JEWELS

No:40, Kannathiddy Road,
(People Bank Opposite)
Jaffna.

இல. 40, கன்னாதிட்டி வீதி,
(மக்கள் வங்கி கிளை முன்பாக)
யாழ்ப்பாணம்.

---

## ராம்கோ சீமெந்து



SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12-1991 தரத்திற்கு அமைவானது
100 வீதம் OPC சீமெந்து

## RAMCO CEMENT

ஆசியாவின் முதல்தர (No 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதனை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். குறைந்த விலையில் நிறைந்த பயனைப்பெற 100 வீதம் OPC சீமெந்தான ராம்கோ சீமெந்தினை உபயோகித்து முழுப்பயனைப் பெறுங்கள்!

இறக்குமதியாளர்: ஈஸ்வரபகவான் அன் கம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 222 2350



# நல்லைக் குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 2005






## கிருஷ்ணா அடைவு கடை

## KRISHNA POWN BROKER

370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021- 222 5046

370, K.K.S.Road,
Jaffna.

அதிரடி விலைத் தள்ளுபடி

## பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி

**டயலொக் காட்கனக்சன்**



11500/=

- வெளிச் செல்லும் அழைப்பு பகல் 12/=
- வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
- உள்வரும் அழைப்பு பகல் 5/=
- உள்வரும் அழைப்பு இரவு 2=

டயலொக்கிற்கு டயலொக்
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

**டயலொக் பில்கனக்சன்**
**மாத வாடகை 300/=**



15000/=

- வெளிச் செல்லும் அழைப்பு பகல் 9.50
- வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
- டயலொக்கிற்கு வெளிச் செல்லும் அழைப்பு 4.20

இரவு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

**டயலொக் பில் கனக்சன்**
**மாத வாடகை 500/=**



15000/=

- வெளிச் செல்லும் அழைப்பு பகல் 9/=
- வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
- டயலொக்கிற்கு வெளிச் செல்லும் அழைப்பு 4.20

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

**மொபிற்றல் பில் கனக்சன்**
**மாத வாடகை 300/=**



17000/=

- வெளிச் செல்லும் அழைப்பு பகல் 9.50
- வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
- உள்வரும் அழைப்பு பகல், இரவு முற்றிலும் இலவசம்
- மொபிற்றலுக்கு பகல், இரவு வெளிச் செல்லும் அழைப்பு 6/=




**உத்தரவாதம் உண்டு**

கையடக்கத் தொலைபேசிகள் விற்பனையும், பழுதுபார்த்தும் கொடுக்கப்படும்.

0712–399220 / 0714 – 182500

தொடர்புகட்கு:

## பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி

Office: 185, 1ஆம் மாடி கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Shop: 205/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நல்லைக் கந்தனின் அருள் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்!

**இதோ 171 ஸ்ரான்லி வீதியில்**

உங்களது நன்மதிப்புப் பெற்ற
பிரீடம் எஸ்.எம்.எல்.ஸ்கூட்டர்
மோட்டார் சைக்கிள், விவசாய உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்



## S.P.N.MOTORS
## எஸ்.பீ.என். மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் நல்லைக் குமரனின் அருள் வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்!

## கஜமுகன் ஹாட் வெயர்ஸ்

யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்

147,149 STANLEY ROAD, JAFFNA.

## PEPSI



T.P : 222 2833, 222 7182, 222 7144

இன்று தேரேறி வரும் நல்லைக் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள் T.V., டெக் வகைகள், றேடியோ வகைகள்
அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், அன்ரனா வகைகள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்

E.S.PERAMPALAM AND CO

இல: 50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(PEPSI, MIRINDA, 7UP
போன்றவற்றிற்கான
ஏகவிநியோகஸ்தர்கள்)

T.P:021- 222 2988,3096 Fax: 021-222 2368





# நல்லைக் குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 2005




## சிறி விவேகா நகை மாடம்

**SRI VIVEKA NAGAI MADHAM**



மனம் நிறைந்த நகைகள் உறுதியுடனும், உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள உகந்த இடம்.

இல.131 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

No.131 Kasthuriar Road, Jaffna.

T.P: 021 222 5501



**அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!**

- ★ சகலவிதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருட்கள்
- ★ கைத்தொழில் மூலப்பொருள்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துச்சரக்குகள், அறோவ்ட் மா ஆகிய அனைத்தையும் பெற்றிட

## ஸ்ரீகாந்த் எசன்ஸ் அன் குறோசறீஸ்

இல.161 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

No.161 K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 2219

**அனைவருக்கும் நல்லைக்கந்தனின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்!**

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல பாடப்புத்தகங்களும், அப்பியாசப் புத்தகங்களும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் நாடவேண்டிய நல்லதோர் நூலகம்.

- தென்னிந்தியச் சஞ்சிகைகள், வாழ்த்துமடல்கள், காலத்திற்கேற்ப கலண்டர்கள், டயறிகள் யாவற்றினதும் உறைவிடமும் இதுவே.
- யாழ்ப்பாணம் - கொழும்பு புதினப் பத்திரிகைகள் அனைத்தினதும் பிரதான முகவர்களும் இவர்களே!

## பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.04 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 6693

இன்று தேர் [illegible] முருகப் பெருமானின் அருள் வேண்டி நிற்கின்றோம்!

உறுதியும், உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க, வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

## வீ.எம்.கே ஜுவல்லரீஸ்




இல.105 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**கிளை ஸ்தாபனம்:**

கண்டி வீதி, சாவகச்சேரி.

## TILKO HOLIDAYS (PVT) LTD

TILKO Holidays



### எம்மிடம்


- ✦ நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட விசாலமான அறைகள்
- ✦ Hot, Cool Water குளியலறைகள்
- ✦ சிறுவர்கள் மகிழ்ச்சியுற Swiming pool வசதி
- ✦ கீழைத்தேச, மேலைத்தேச சுவைமிக்க உணவுகள், கடல் உணவுகளும் உடனுக்குடன் தயாரித்துப் பரிமாறப்படும்.
- ✦ தங்கியிருப்போர் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ள புற்தரைகள்[illegible], பூந்தோட்டம், வட்டக் குடில்களும்
- ✦ சுற்றுலாப் பயணிகளுக்கான வாகன வசதிகளும்
- ✦ இவற்றுடன் பயிற்றப்பட்ட எமது பணியாளர்களின் கனிவான பராமரிப்பும், இன்முகத்துடன் கூடிய சேவைகளும்.

## இவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்


**TILKO HOLIDAY'S (PVT) LTD**
**HOTELS AND GUEST HOUSES**
**JAFFNA CITY HOTEL**
**NO. 70/6, K.K.S. ROAD, JAFFNA.**
Tel : 021 222 5969
Fax: 021 222 7291
E-mail: tilkoholidays @ yahoo.com
Web: www.tilkoholidays.com



**BRANCHES:**
BOUGAIN VILLA GUEST HOUSE
305, Main Street, Jaffna.
PALM VILLA GUEST HOUSE
114, Kandy Road, Jaffna.
MOUNT LA VILLA
65, Sangamitta Avenue, Mt.Lavinia.
Tel : 011 2713803, 011 4216428
SANDIYA VILLA
Lower Road, Trincomalee.



**LONDON OFFICE:**
213, HIGH STREET NORTH,
EAST HAM LONDON E6 1jG
Tel: (++44) 020 8472 0029
Fax: (++44) 020 8503 5996
Mobile: (++44) (0)7957400 777.






# நல்லைக் குமரன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 2005




அனைவருக்கும் நல்லைக் கந்தனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

காஸ், காஸ் செற்களையும் மோட்டார் சைக்கிள்களையும்
உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்





## கரனி மோட்டோர்ஸ் அன் காட்வெயர்

## HARANI MOTORS & HARDWARES

காஸ், காஸ் செற் விற்பனையாளர்

64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2850
தொலைநகல்: 021 222 2850

தேரேறிவரும் நல்லைக் குமரனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

குறித்த தவணையில் ஓடர் நகைகளை தரமான
22 கரட் தங்க நகைகளில் செய்துதர யாழ். நகரில்
நம்பிக்கையான நகைமாடம்



## மைதில் நகைமாடம்

## MAITHELY NAGAI MAADAM

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7902, 077- 6092154

புத்தம் புது டிசைன்களில் குறித்த தவணையில் தரமாக செய்து தர

## YARL MAITHILY JEWELLERS

யாழ் மைதிலி ஜ்வலர்ஸ்

157, Sea Street, Colombo - 11
Tel: 011-2396239, 077-6092154

நல்லைக் குமரனின் அருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்!

அழகிய தங்க நகைகளின் தரத்தினை தாரக மந்திரமாகக் கொண்ட நிறுவனம்



## நிருத்திகா ஜுவல்லர்ஸ்

இல.177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறிவரும் கந்தனின் அருட் கடாட்சம்
அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

நம்பிக்கை ~ நாணயம் ~
உத்தரவாதத்துடன் தரம் மிக்க அசல்
22 கரட் தங்க
நகைகளைப் பெற்றுக்
கொள்ள யாழ். நகரில்
சிறந்த ஸ்தாபனம்



## வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். Phone/fax: - 021 - 222 2824

தேரேறிவரும் நல்லைக் குமரனின் அருள்
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

## பிரகாஸ் போக்குவரத்து சேவை

கொழும்பு ~ கிளிநொச்சி ~ யாழ்ப்பாணம்

கொழும்பிலிருந்து பொருட்களை வடபகுதிக்கும், அங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொழும்பிற்கு பரிமாற்றம் செய்யவும்
கோழி மற்றும் விலங்கினங்களின் தரம் வாய்ந்த
உணவுகளின் உடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

பிரகாஸ் போக்குவரத்து சேவை

இல.455, 457, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2145
தொலைநகல்: 021 222 2958



இல-221, டாம் வீதி, கொழும்பு-12.

T.P: - 0112543310 - 0112543309

தேரேறிவரும் நல்லைக் குமரனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22ct தங்க நகைகளைப் பெற்றிட
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்





## சாரங்கா நகை மாடம்

## Saranga Nagai Madam

Manufacturers of gold Jewels

T.P: 021 222 2480
Fax: 021 222 6972

157/1, Kasthuriar Road,
Jaffna.

சாரங்கன் நகை மாடம்
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6059

175/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



# நல்லைக் குமரன் தேர்த்திருவிழா
# சிறப்பு மலர் - 2005




தேரேறிவரும் கந்தனின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

மனதிற்குகந்த
ஒப்பற்ற வடிவம்



## YASO MOTORS & HARDWARE

மோட்டோர் வாகன பாவனையாளர்களுக்கு நற்செய்தி



சாதாரண ஒயில் 1000Km
Valoline ஒயில் 4000km

140 நாடுகளில் 135 வருடங்களாக
விற்பனையாகிறது valvoline No. 1 ஒயில்
அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது.

ஒரு வருட உத்தரவாதம்
இரு தடவை இலவச சேவிஸ்
ஒரு தலைக்கவசம்

* 1 கிறீஸ், வித்தினியம் கிறீஸ்
(இது நீரிலும் கரையாது,
சூட்டிலும் இளகாது)
* 1 பெற்றோல் எஞ்சின் ஒயில்
* 1 டீசல் இன்ஜெக்ரர் கிளீனர்
* 1 டீசல் எஞ்சின் ஒயில்

எந்நேரத்திலும் எந்த இடத்திலும் காத்திரமாய்
நிறுத்தக்கூடிய drum brake system




நீண்ட நாட்களுக்குப் பின் அநேக
வாடிக்கையாளரின் விருப்புத்
தெரிவுக்குள்ளான

**JIALING**

No:1 மோட்டார் சைக்கிள்

காத்திரமான சக்தி கொண்ட உறுதியான
தயாரிப்பு

அனைத்து வகையான ஒயில்
வகைகளின் வவுனியா,
கிளிநொச்சி, யாழ்ப்பாண
ஏகவிநியோகஸ்தர்கள்



## யசோ மோட்டோர்ஸ்

இல:163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

TEL/FAX- 0094 - 021 222 2544

இன்று தேரேறும் நல்லூர்க் கந்தனின் அருள் அன்பர்கள்,
நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.



## டாட்
## என்ரபிரைஸ்

கைக்கடிகாரங்கள்,
சுவர்க்கடிகாரங்கள், மின்சார
அழகுசாதனப் பொருட்கள்
மொத்த, சில்லறை
விற்பனையாளர்கள்

## DART ENTERPRISE

*Wholesale & Retail Dealers in Watches, Wall Clock,
Electronic, Electrical, Gift Items & Fancy Goods.*

No: 11,12 New Market Inside,
Jaffna. T.P: 222 3098, 222 7622
Fax:- 222 3098

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இன்று தேரேறி
வரும் நல்லைக் கந்தனின் அருள்
கிடைப்பதாக!



புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா?



அவற்றிற்கான
உதிரிப்பாகங்
களா?
மோட்டார்
வாகனங்களா?
பற்றறி
வகைகளா?
அனைத்தையும்
ஓரிடத்தில்
நிதான விலை
யில் பெற்றிட

## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

இல.108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மெயின் வீதி, சங்கானை.

## அருள் விநாயகர்
## றேடர்ஸ்

இல.106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

**சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முப்பின் அடிப்படையில் தெரிவானோரின் மிகுதிப் பெயர் விபரம் வருமாறு:-**

386.யா/சா/3072 திரு. மாரிமுத்து செல்லையா
387.யா/சா/3080 திருமதி. வள்ளியம்மை அப்பாக்குட்டி
388.யா/சா/3082 திரு. மயில்வாகனம் அருணாசலம்
389.யா/சா/3083 திருமதி. வேதநாயகி பத்மநாதன்
390.யா/சா/3088 திரு. கந்தையா நடராசா
391.யா/சா/3104 திரு. இளையதம்பி செல்லத்துரை
392.யா/சா/3107 திரு. தேவசகாயம் இராசையா
393.யா/சா/3121 திரு. நாகமுத்து துரைசிங்கம்
394.யா/சா/3131 திரு. பூதர் நாகலிங்கம்
395.யா/சா/3150 திருமதி. சிவபாக்கியம் கந்தசாமி
396.யா/சா/3169 திருமதி. நாகமணிப்பிள்ளை சதாசிவம்
397.யா/சா/3172 திரு. சின்னக்குட்டி இராசா
398.யா/சா/3181 திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
399.யா/சா/3189 திருமதி. கனகம்மா பொன்னையா
400.யா/சா/3200 திரு. கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
401.யா/சா/3207 திரு. பொன்னையா விநாயகமூர்த்தி
402.யா/சா/3212 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
403.யா/சா/3227 திருமதி. தெய்வானைப்பிள்ளை வீரகத்தி
404.யா/சா/3231 திரு. வேலுப்பிள்ளை நடராசா
405.யா/சா/3240 திருமதி. சிவகாமிப்பிள்ளை சின்னையா
406.யா/சா/3252 திரு. பொன்னையா பாலகிருஸ்ணன்
407.யா/சா/3282 திருமதி. பகவதிப்பிள்ளை கந்தையா
408.யா/சா/3285 திருமதி. நல்லம்மா கந்தையா
409.யா/சா/3293 திரு. கந்தையா நடராசா
410.யா/சா/3297 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
411.யா/சா/3298 திருமதி. இராசமணியம்மா காங்கேசு
412.யா/சா/3311 திரு. நாகலிங்கம் தனபாலசிங்கம்
413.யா/சா/3314 திரு. கதிரித்தம்பி பொன்னுத்துரை
414.யா/சா/3331 திரு. சின்னத்தம்பி கந்தையா
415.யா/சா/3338 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
416.யா/சா/3349 திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
417.யா/சா/3353 திரு. சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டு
418.யா/சா/3357 திரு. வல்லிபுரம் கந்தையா
419.யா/சா/3359 திரு. பண்டாரம் அருணாசலம் இராசையா
420.யா/சா/3363 திரு. மூத்ததம்பி சின்னத்தம்பி
421.யா/சா/3374 திருமதி. பூரணம் பஞ்சாட்சரம்
422.யா/சா/3383 திரு. சுப்பிரமணியம் சச்சிதானந்தம்
423.யா/சா/3403 திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
424.யா/சா/3417 திருமதி. நாகம்மா கந்தையா
425.யா/சா/3425 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
426.யா/சா/3432 திரு. ஞானக்குட்டி ஐயாத்தம்பி
427.யா/சா/3445 திரு. தாமோதரம்பிள்ளை இராமலிங்கம்
428.யா/சா/3455 திரு. வேலுப்பிள்ளை செல்வராசா
429.யா/சா/3459 திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியம்
430.யா/சா/3466 திருமதி. சிதம்பரம் செல்லையா
431.யா/சா/3471 திரு. சிவசம்பு கணேசன்
432.யா/சா/3485 திரு. வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை
433.யா/சா/3501 திருமதி. இராசம்மா கந்தசாமி
434.யா/சா/3529 திரு. சுப்பிரமணியம் சாம்பசிவம்
435.யா/சா/3537 திரு. கார்த்திகேசு தம்பிப்பிள்ளை
436.யா/சா/3538 திரு. கந்தையா குமாரசாமி
437.யா/சா/3540 திரு. ஆறுமுகம் மார்க்கண்டு
438.யா/சா/3553 திரு. இராசகாரியர் லட்சுமிநாதன்
439.யா/சா/3554 திரு. கணபதிப்பிள்ளை செல்லையா
440.யா/சா/3566 திருமதி. சிவபாக்கியம் யோகநாதன்
441.யா/சா/3568 திரு. சின்னத்தம்பி காசித்தம்பி மயில்வாகனம்
442.யா/சா/3574 திரு. பொன்னையா குஞ்சையா
443.யா/சா/3580 திரு. சின்னப்பு நல்லதம்பி
444.யா/சா/3603 திரு. தம்பிப்பிள்ளை இராசையா
445.யா/சா/3609 திரு. நாகமணி கணபதிப்பிள்ளை
446.யா/சா/3610 திருமதி. சின்னம்மா கதிரித்தம்பி
447.யா/சா/3621 திருமதி. தெய்வானைப்பிள்ளை சரவணமுத்து
448.யா/சா/3645 திரு. கந்தர் செல்லத்துரை
449.யா/சா/3649 திரு. கந்தையா பரமலிங்கம்
450.யா/சா/3651 திருமதி. தெய்வானைப்பிள்ளை சின்னத்தம்பி
451.யா/சா/3682 திரு. பொன்னம்பலம் சர்வானந்தன்
452.யா/சா/3689 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
453.யா/சா/3691 திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு
454.யா/சா/3692 திருமதி. எலிசபெத் ஞானப்பிரகாசம்
455.யா/சா/3700 திரு. வேலுப்பிள்ளை கைலாயபிள்ளை
456.யா/சா/3702 திரு. பொன்னையா வெற்றிவேலு
457.யா/சா/3705 திரு. நல்லதம்பி இராமலிங்கம்
458.யா/சா/3723 திரு. வினாசித்தம்பி சுப்பிரமணியம்
459.யா/சா/3725 திரு. எஸ்தாக்கி வலத்தீஸ்
460.யா/சா/3729 திரு. கந்தன் ஆறுமுகம்
461.யா/சா/3730 திரு. தம்பையா இரத்தினசபாபதி
462.யா/சா/3738 திரு. கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்
463.யா/சா/3743 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
464.யா/சா/3754 திரு. சின்னத்தம்பி சின்னக்குட்டி
465.யா/சா/3775 திரு. ஆறுமுகம் பேரம்பலம்
466.யா/சா/3806 திரு. ஆறுமுகம் கந்தையா
467.யா/சா/3807 திரு. பொன்னம்பலம் அம்பிகைபாகன்
468.யா/சா/3808 திருமதி. மகேஸ்வரி நடராசா
469.யா/சா/3814 திரு. முதலித்தம்பி காசித்தம்பி
470.யா/சா/3839 திரு. சோமசுந்தரம் வைத்திலிங்கம்
471.யா/சா/3847 திருமதி. தங்கம்மா வைரமுத்து
472.யா/சா/3854 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
473.யா/சா/3864 திரு. சின்னத்தம்பி கதிர்காமு
474.யா/சா/3866 செல்வி. தர்மினி சதானந்தம்
475.யா/சா/3905 திரு. சுந்தரம் சிவசம்பு
476.யா/சா/3925 திரு. ஆறுமுகம் பசுபதி
477.யா/சா/3942 திரு. ஆறுமுகம் தருமலிங்கம்
478.யா/சா/3951 திரு. பேரம்பலம் சரவணமுத்து
479.யா/சா/3974 திரு. சின்னத்தம்பி சிவனையா
480.யா/சா/3977 திரு. முருகர் இராசரத்தினம்
481.யா/சா/3983 திரு. கதிரமலை இராமலிங்கம் ஐயர்
482.யா/சா/4001 திரு. கந்தையா சிதம்பரநாதர்
483.யா/சா/4021 திரு. செல்லையா குணரத்தினம்
484.யா/சா/4022 திரு. செல்லையா குணரத்தினம்
485.யா/சா/4027 செல்வி. பரமேஸ்வரிபிள்ளை சுப்பிரமணியம்
486.யா/சா/4031 திரு. சட்டநாதர் குலநாயகம்
487.யா/சா/4034 திரு. கணபதி சின்னத்தம்பி
488.யா/சா/4035 திரு. அருணாசலம் ஆறுமுகம்
489.யா/சா/4049 திரு. வேலுப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
490.யா/சா/4068 திருமதி. பரமேஸ்வரி சரவணமுத்து
491.யா/சா/4085 திருமதி. இந்திராதேவி நடராசபிள்ளை
492.யா/சா/4096 திரு. நாகேந்திரம் தம்பிப்பிள்ளை
493.யா/சா/4099 திரு. வேலுப்பிள்ளை முருகேசு
494.யா/சா/4108 திரு. சின்னத்தம்பி கந்தையா
495.யா/சா/4109 திரு. சின்னப்பா செல்லத்தம்பி
496.யா/சா/4111 திரு. சந்தையினார் வேலுப்பிள்ளை
497.யா/சா/4112 திரு. கணபதி சின்னன்
498.யா/சா/4119 திரு. குமார் நடராசா
499.யா/சா/4127 திரு. கந்தர் சின்னத்தம்பி
500.யா/சா/4132 திரு. இராமலிங்கம் பரமாநந்தர்
501.யா/சா/4164 திருமதி. சின்னப்பிள்ளை கணபதிப் பிள்ளை
502.யா/சா/4168 திரு. சின்னத்தம்பி முருகேசு
503.யா/சா/4169 திரு. சின்னத்தம்பி பசுபதிப்பிள்ளை
504.யா/சா/4176 திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
505.யா/சா/4192 திரு. பரமானந்தர் வேலாயுதம்பிள்ளை
506.யா/சா/4193 திருமதி. இலட்சுமி கணபதி
507.யா/சா/4198 திரு. சின்னர் இளையதம்பி
508.யா/சா/4207 திரு. சிதம்பரநாதன் சுப்பிரமணியம்
509.யா/சா/4208 திரு. கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை
510.யா/சா/4221 திரு. சின்னக்குட்டியர் பொன்னம்பலம்
511.யா/சா/4227 திரு. விசுவநாதர் தனபாலசிங்கம்
512.யா/சா/4256 திருமதி. வள்ளிநாயகி சின்னத்தம்பி
513.யா/சா/4274 திரு. மாணிக்கம் முத்தன்
514.யா/சா/4279 திரு. அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை
515.யா/சா/4283 திருமதி. முத்துப்பிள்ளை வேலுப்பிள்ளை
516.யா/சா/4301 திரு. தம்பு மயில்வாகனம்
517.யா/சா/4305 திரு. மாப்பாணி இராசதுரை
518.யா/சா/4306 திரு. செல்லையா சுப்பிரமணியம்
519.யா/சா/4314 திரு. வீரகத்தியர் சேனாதிராசா
520.யா/சா/4316 திருமதி. இலட்சுமி தாமோதரம்பிள்ளை
521.யா/சா/4322 திரு. சின்னையா கணேசலிங்கம்
522.யா/சா/4332 திருமதி. எவுசேனி அந்தோனி
523.யா/சா/4337 திரு. அருணாசலம் கணபதிப்பிள்ளை
524.யா/சா/4340 திரு. முருகுப்பிள்ளை கதிர்காமத்தம்பி
525.யா/சா/4361 திருமதி. மகேஸ்வரி நடராசா
526.யா/சா/4363 திரு. செல்லையா சரவணமுத்து
527.யா/சா/4387 திரு. வேலுப்பிள்ளை நடராசா
528.யா/சா/4388 திருமதி. பொன்னம்மா வேலாயுதபிள்ளை
529.யா/சா/4391 திரு. செல்லையா சடாச்சரம்
530.யா/சா/4395 திருமதி. நாகம்மா சிவகுருநாதன்
531.யா/சா/4398 திரு. வேலுப்பிள்ளை ஆதிரைநாதன்
532.யா/சா/4404 திரு. பிரான்சிஸ் இராசேந்திரம்
533.யா/சா/4425 திருமதி. அருளம்மா எற்வேட் ஜோர்ஜ்
534.யா/சா/4441 திரு. ஆழ்வாப்பிள்ளை இராமச்சந்திரன்
535.யா/சா/4447 திருமதி. சரஸ்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்
536.யா/சா/4455 திருமதி.சரஸ்வதிப்பிள்ளை சுப்பிரமணியம்
537.யா/சா/4470 திரு. ஜோசப் டானியல் அரியநாயகம்
538.யா/சா/4474 திரு. வேலன் கிட்டினன்
539.யா/சா/4506 திரு. வீரகத்தி வீரசிங்கம்
540.யா/சா/4515 திரு. பொன்னையா தம்பியையா
541.யா/சா/4532 திருமதி. பாக்கியம் செல்லையா
542.யா/சா/4534 திரு. கந்தையா நாகலிங்கம்
543.யா/சா/4538 திரு. வேலுப்பிள்ளை அருணாசலம்
544.யா/சா/4544 திரு. கந்தையா ஐயாத்துரை
545.யா/சா/4545 திருமதி. பாக்கியம் செல்லையா
546.யா/சா/4549 திரு. வினாசித்தம்பி கந்தையா
547.யா/சா/4567 திரு. வல்லிபுரம் கந்தையா
548.யா/சா/4570 திரு. சரவணமுத்து வைத்திலிங்கம்
549.யா/சா/4574 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
550.யா/சா/4576 திருமதி.சிவகாமிப்பிள்ளை திருநாவுக்கரசு
551.யா/சா/4588 திரு. கந்தையா தில்லையம்பலம்
552.யா/சா/4589 திருமதி. அன்னம்மா ஐயாத்துரை
553.யா/சா/4592 திருமதி.. சின்னம்மா இராமநாதன்
554.யா/சா/4600 திருமதி. விசாலாட்சி பரமானந்தம்
555.யா/சா/4603 திரு. காசிப்பிள்ளை நவரத்தினம்
556.யா/சா/4608 திருமதி. திரேசம்மா இன்னாசிமுத்து
557.யா/சா/4613 திரு. சந்திரசேகரம் நடராசா
558.யா/சா/4621 திரு. சதாசிவம் பாலசுப்பிரமணியம்
559.யா/சா/4626 திரு. சங்கரப்பிள்ளை குணபாலசிங்கம்
560.யா/சா/4633 திரு. சின்னத்தம்பி பாலசிங்கம்
561.யா/சா/4637 திருமதி. சரவணமுத்து சின்னத்தங்கம்
562.யா/சா/4639 திரு. கதிர்காமர் குழந்தைவேலு
563.யா/சா/4644 திரு. வேலுப்பிள்ளை சின்னையா
564.யா/சா/4647 திரு. இளையதம்பி ஐயாத்துரை
565.யா/சா/4652 திரு. தியாகராசா வெற்றிவேலு
566.யா/சா/4676 திரு. ஆறுமுகம் இளையதம்பி
567.யா/சா/4677 திரு. முத்துத்தம்பி ஒப்பிலாமணி
568.யா/சா/4684 திரு. சுவாமிநாதர் வினாசித்தம்பி
569.யா/சா/4702 திரு. குமாரசாமி கார்த்திகேசு
570.யா/சா/4709 திரு. அந்தோனிப்பிள்ளைபிரான் சிஸ்சேவியர்
571.யா/சா/4720 திரு. ஞானப்பிரகாசம் ஸ்ரனிஸ்லோஸ்
572.யா/சா/4721 திரு. மத்தேசு தேவசகாயம்
573.யா/சா/4724 திரு. சின்னத்தம்பி யோகரத்தினம்
574.யா/சா/4726 திருமதி. பொன்னம்மா கந்தையா
575.யா/சா/4730 திரு. வினாசித்தம்பி நடராசா
576.யா/சா/4734 திருமதி. சரஸ்வதி சுப்பையா
577.யா/சா/4742 திருமதி. மரியம் இரத்தினராசா
578.யா/சா/4750 திரு. சந்திரசேகரர் இராசரத்தினம்
579.யா/சா/4753 திரு. இராமநாதர் அம்பலவானர்
580.யா/சா/4762 திரு. சிவசுப்பிரமணியம் தயானந்தன்
581.யா/சா/4764 திரு. பெரியதம்பி பாலசிங்கம்
582.யா/சா/4766 திருமதி. செல்லாச்சி பொன்னையா
583.யா/சா/4772 திருமதி. சிதம்பரம் சின்னத்தம்பி
584.யா/சா/4789 திரு. கந்தையா பேரம்பலம்
585.யா/சா/4807 திரு. வாரித்தம்பி சின்னத்துரை
586.யா/சா/4814 திருமதி. இராஜகுமாரி விக்னேஸ்வரன்
587.யா/சா/4820 திரு. சங்கரப்பிள்ளை பேரம்பலம்
588.யா/சா/4823 திருமதி. சிவபாக்கியம் இராமநாதர்
589.யா/சா/4862திரு. கனகசபை அருணாசலம்
590.யா/சா/4863 திரு. பூதன் செல்லன்
591.யா/சா/4866 திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம்
592.யா/சா/4871 திரு. சரவணமுத்து பொன்னம்பலம்
593.யா/சா/4874 திருமதி. நாகரத்தினம் முருகேசு
594.யா/சா/4876 திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை
595.யா/சா/4886 திரு. பொன்னு தம்பையா
596.யா/சா/4913 திரு. தம்பையா நாகலிங்கம்
597.யா/சா/4925 திரு. சின்னையா கணபதிப்பிள்ளை
598.யா/சா/4930 திரு. கந்தையா குலசேகரம்பிள்ளை
599.யா/சா/4932 திரு. காசிப்பிள்ளை பொன்னுத்துரை
600.யா/சா/4939 திரு. முதலி விநாசி
601.யா/சா/4942 செல்வி. எலிசபெத் செல்வரட்ணம்
602.யா/சா/4944 திருமதி. ஞானபூபதி சண்முகம்
603.யா/சா/4953 திருமதி. பாரிப்பிள்ளை செல்லையா
604.யா/சா/4961 திருமதி. மாரியம்மா பொன்னையா
605.யா/சா/4970 திரு. தம்பையா வேலுப்பிள்ளை
606.யா/சா/4985 திருமதி. நல்லம்மா முருகேசு
607.யா/சா/4986 திரு. சின்னன் கணபதிப்பிள்ளை
608.யா/சா/4987 திரு. பெருமாள் செல்லையா
609.யா/சா/4990 திரு. கந்தையா சின்னத்தம்பி
610.யா/சா/4996 திரு. இளையதம்பி இராசையா
611.யா/சா/5005 திரு. சின்னட்டி சின்னவன்
612.யா/சா/5008 திரு. கந்தன் மகாலிங்கம்
613.யா/சா/5040 திரு. ஆறுமுகம் ஏகாம்பரம்
614.யா/சா/5043 திருமதி. செல்லம்மா கிட்டினன்
615.யா/சா/5054 திருமதி. தங்கம்மா வேலுப்பிள்ளை
616.யா/சா/5061 திரு. ஞானப்பிரகாசம் இன்னாசிமுத்து
617.யா/சா/5064 திரு. சின்னத்தம்பி கதிரவேலு
618.யா/சா/5066 திரு. செல்லையா ஐயம்பிள்ளை
619.யா/சா/5074 திருமதி. சேதுப்பிள்ளை சிதம்பரநாதர்
620.யா/சா/5113 திரு. சின்னத்தம்பி சுந்தரம்
621.யா/சா/5134 திருமதி. வள்ளியம்மை சிதம்பரநாதர்
622.யா/சா/5135 திரு. வன்னித்தம்பி கணேசமூர்த்தி
623.யா/சா/5160 திரு. தம்பிஐயா விக்ரர்மாசில்லா இராசரத்தினம்
624.யா/சா/5185 திரு. கிறகோரி சவரிமுத்து
625.யா/சா/5193 திரு. கதிரித்தம்பி வேலுப்பிள்ளை
626.யா/சா/5195 திரு. வல்லி கதிர்காமு
627.யா/சா/5209 திரு. கந்தப்பு வீரகத்தி
628.யா/சா/5211 திரு. கூளையன் பெரியதம்பி
629.யா/சா/5214 திரு. சரவணமுத்து குமாரவேலு
630.யா/சா/5245 திருமதி. கதிராசிப்பிள்ளை கந்தையா
631.யா/சா/5272 திரு. வீரவாகு பெருமாள்
632.யா/சா/5277 திரு. முருகன் அண்ணாமலை
633.யா/சா/5284 திருமதி. நேசரத்தினம் கந்தையா
634.யா/சா/5326 திரு. நாகமுத்து வல்லிபுரம்
635.யா/சா/5328 திரு. கந்தையா கார்த்திகேசு
636.யா/சா/5331 திரு. சரவணமுத்து ஆறுமுகம்
637.யா/சா/5332 திரு. சங்கரப்பிள்ளை தம்பிமுத்து
638.யா/சா/5348 திரு. சின்னப்பு கதிரவேலு
639.யா/சா/5349 திருமதி. காமாட்சி சின்னையா
640.யா/சா/5365 திருமதி. திரவியம் கந்தையா
641.யா/சா/5376 திருமதி. றோசலின் யோசேவ்
642.யா/சா/5379 திரு. ராமலிங்கம் குலசிங்கம்
643.யா/சா/5401 திரு. வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை
644.யா/சா/5403 திரு. முருகன் செல்லத்துரை
645.யா/சா/5417 திருமதி. சின்னம்மா சாந்தலிங்கம்
646.யா/சா/5430 திரு. முத்துத்தம்பி ஏரம்பு
647.யா/சா/5438 திருமதி. ஈழத்திரவியமலர் இரத்தினராசா
648.யா/சா/5442 திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தையா
649.யா/சா/5447 திரு. வைத்திலிங்கம் சின்னராசா
650.யா/சா/5455திரு. சுப்பிரமணியம் சோமநாதன்
651.யா/சா/5462 திருமதி. சரஸ்வதி தில்லையம்பலம்
652.யா/சா/5463 திரு. தம்பு செல்வவினாயகம்
653.யா/சா/5464 திரு. சின்னப்பு மாணிக்கம்
654.யா/சா/5465 திரு. பொன்னையா சிதம்பரப்பிள்ளை
655.யா/சா/5472 திரு. வீரவாகு நாகலிங்கம்
656.யா/சா/5506 திரு. சின்னத்தம்பி கணபதி
657.யா/சா/5519 திருமதி. மேரிசெல்வமணி கந்தப்பு
658.யா/சா/5535 திரு. கந்தையா கதிர்காமு
659.யா/சா/5546 திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை
660.யா/சா/5562 திரு. தில்லைநடேசன் முருகதாச்ன்
661.யா/சா/5587 செல்வன். வல்லிபுரம் அருமைநாயகம் ஜெயபாலன்
662.யா/சா/5601 திருமதி. இராசமணி முருகேசு
663.யா/சா/5603 திரு. டேவிட் நல்லையா தங்கத்துரை
664.யா/சா/5611 செல்வி. பஞ்சலட்சுமி வாமதேவன்
665.யா/சா/5621 திருமதி. செல்லம்மா நடராசா
666.யா/சா/5634 திரு. சித்தர் கந்தையா
667.யா/சா/5652 செல்வி. சிறீதேவி செல்லையா
668.யா/சா/5656 திரு. பண்டாரி வேலுப்பிள்ளை
669.யா/சா/5659 திருமதி. சரஸ்வதி வடிவேல்
670.யா/சா/5663 திருமதி. பொன்னம்மா இளையதம்பி
671.யா/சா/5672 திருமதி. பொன்னுப்பிள்ளை மார்க்கண்டு
672.யா/சா/5673 திரு. தம்பையா சங்கரப்பிள்ளை
673.யா/சா/5674 திரு. கந்தையா சின்னப்பா
674.யா/சா/5692 திரு. நடராசா அருளையா
675.யா/சா/5693 திரு. சின்னத்துரை இரத்தினசிங்கம்
676.யா/சா/5696 திருமதி. முத்து வீரகத்தி
677.யா/சா/5704 திரு. கணபதி சின்னராசா
678.யா/சா/5706 திரு. சங்கரன் பாலன்
679.யா/சா/5717 திரு. வல்லிபுரம் சுப்பையா
680.யா/சா/5719 திருமதி. கமலம் சின்னத்தம்பி
681.யா/சா/5727 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்
682.யா/சா/5729 திரு. சோமசுந்தரம் இரத்தினசபாபதி
683.யா/சா/5735 செல்வி. நாகமுத்து சுப்பர்

# வீரப்பன் வாழ்வும் வதமும் ⑨

## மீள் பார்வை

என். சொக்கன்

ஸ்ரீநிவாஸ் கொலையைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு (1992 பல கர்நாடக மாநில பொலிஸாரைக் கொன்றான் வீரப்பன். மேலும் பல வனத்துறை அலுலவலர்களும் பொது மக்களும் அவனால் பாதிக்கப்பட்டார்கள். இதைப் பற்றிய செய்திகளை வெளியிடும் போதெல்லாம், அதே பழைய புகைப்படம்.

இதனால் சலிப்படைந்த நக்கீரன் கோபால் எப்படியாவது வீரப்பனின் புதிய புகைப்படங்கள் சிலவற்றைப் பெறவேண்டும் என்று எண்ணினார். இதன்மூலம் பல இலாபங்கள் ஒரே புகைப் படத்தை மாற்றி மாற்றிப் பிரசுரிக்கும் அவஸ்தை குறைவதுடன், வீரப்பன் என்று ஒருவன் நியமாகவே இருக்கிறான் என்பதை உறுதிப்படுத்தி அவனுடைய தரப்பு நியாயங்களையும் மக்களிடமும கொண்டு செல்லலாம்.

இந்த எண்ணத்துடன் , வீரப்பனின் பேட்டி, புகைப்படங்களை பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கினார் கோபால். வீரப்பனின் நடமாட்டம் அதிகமாக இருக்கக் கூடிய மாவட்டங்களைக் கண்டறிந்து அங்கே பணிபுரியும் "நக்கீரன் " நிருபர்களையெல்லாம் அழைத்து இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை சொன்னார் அவர் எப்படியாவது வீரப்பனின் பேட்டி வேண்டும். அது முடியாது என்றால், அவனுடைய சில புகைப்படங்களாவது அவசியம் வேண்டும்!.



கோபால் மற்றும் "நக்கீரன் " நிருப்ர்களின் தொடர்ந்த முயற்சிக்கு சீக்கிரத்திலேயே பலன் கிடைத்தது "நக்கீரன்" நிருபரான சிவசுப்ரமணியத்தை சந்திக்கவும் பேட்டியளிக்கவும் ஒப்புக்கொண்டான் வீரப்பன்.

இதையடுத்து வீரப்பன் வசிக்கும் காட்டுக்குள் சென்று அவனுடைய குழுவைச் சேர்ந்தவர்களின் உதவியோடு வீரப்பனை நேரில் சந்தித்து பேட்டியும், புதிய புகைப் படங்களும் எடுத்து வந்தார் சிவசுப்ரமணியம்.

1993ஆம் ஆண்டு, ஏப்ரல் மாத்ம், நக்கீரன் இதழில வீரப்பனின் புதிய புகைப்படங்களும் செய்திகளும் வெளி வந்தன. இந்த சாதனையை நிகழ்த்திய நிருபர் சிவசுப்ரமணியம் வீரப்பனை நேரில் சந்தித்தது எப்படி என்று விபரித்திருந்தார்.

யாரலும் பார்க்க முடியாத வீரப்பனை நேரில் சந்தித்து பேடடி கண்டுவெளியிட்டிருக்கும் "நக்கீரன்" இதழுக்கு , இந்தியா முழுவதிலும் இருந்து பாராட் டுகள் குவிந்தன. ஆனால் அதேசமயத்தில் வீரப்பனை நேரில் சந்தித்தது நாங்கள்தான் என்று இந்தியா டுடே இதழ் எழுதி சில புகைப்படங் களையும் வெளியிட்டது.

இந்தக் குழப்பத்திற்குக் காரணம் வீரப்பனைச் சந்தித்த நிருபர் புகைப்படக்காரர், அந்தப் புகைப்படங்களை இரண்டு பத்திரிகைகளுக்கும் தந்துவிட்டது தான்! ஆகவே இந்தச் சாதனைக்கு இருவருமே உரிமை கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள்.

பினனர் இந்தக் குழப்பம் ஒரு வழியாகத் தீர்ந்தது. அதன்பின் நக்கீரன் இதழ் சார்பாக நிருபா சிவசுப்ரமணியமும் ஆசிரியர் கோபாலும் பலமுறை வீரப்பனைச் சந்தித்து அவனுடைய பரபரப்பான பேட்டிகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

1992 ஆம் ஆண்டு வீரப்பன் முத்துலட்சுமி தம்பதியினருக்கு முதல் குழந்தை பிறந்தது. குழந் தைக்கு "வித்யாராணி " என்று பெயர் சூட்டப்பட்டது. பின்னர் அவர்களுக்கு பிரபா என்ற இன்னொரு பெண் குழந்தை பிறந்தது.

அடுத்த ஆண்டு வீரப்பனுக்கு மூன்றாவது குழந்தை பிறந்தது. முதல் இரண்டு குழந்தைகளைப் போலவே இதுவும் பெண்குழந்தை என்பதால் அவனுக்கு அந்தக் குழந்தையின் மீது வெறுப்பு உண்டானதாக சொல்லப்படுகிறது.

இதற்கிடையே வீரப்பனால் பெரிதும் பாதிப்புகளுக்கு உள்ளான கார்நாடக அரசு அவனைப் பிடிப்பதற்காக 1990ஆண் ஆண்டு K.U. ஷெட்டி தலைமையில் சிறப்பு அதிரடிப்படை ஒன்றை அமைத்தது.

சீக்கிரத்தலேயே (1992ஆம் ஆண்டு) வீரப்பனைப் பிடிப்பதற்காக தமிழக அரசும் அதிரடிப்படையை உருவாக்கி காட்டுக்கு அனுப்பியது. ஆகவே காட்டில் பொலிஸ் நடமாட்டம் அதிகரித்தது. வீரப்பன் தனது மறைவிடங்களை அடிக்கடி மாற்ற வேண்டியிருந்தது.

ஆனால் அப்போதுதான் பிறந்திருந்த வீரப்பனின் மூன்றாவது குழந்தை அடிக்கடி அழுது கொண்டிருந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டு காவல்துறையினர் தன்னைப் பிடித்து விடுவார்களோ என்று பயந்த வீரப்பன் அந்தக் குழந்தையைக் கொன்றுவிட்டான்.

வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி அவனுடைய தொழில், பயங்கர நடவடிக்கைகள், குற்றங்களைப் பற்றி நன்றாகத் தெரிந்த பிறகுதான் அவனைக் காதலித்து மணந்திருந்தார் . என்றாலும் தன்னுடைய குழந்தையை தானே கொல்லக்கூடிய ஒரு மனிதனை அவரால் கொஞ்சமும் ஏற்கமுடியவில்லை. ஆகவே அதுவரை வீரப்பனோடு காட்டில் வாழ்ந்திருந்த முத்துலட்சுமி, இந்த சம்பவத்திற்குப் பின் அங்கிருந்து வெளியேறிவட்டார். ஆனால் முத்துலட்சுமியின் இந்த வெளியேற்றத்தால் வீரப்பனின் மனம் மாறியதாகவோ அவனுடைய நடவடிக்கைகளில் எந்த மாற்றமும உண்டானதாகவோ தெரியவில்லை. 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு-கர்நாடக எல்லையில் பாலாறுக்கு அருகே ஒரு காவல்துறை அதிகாரிக்காக கண்ணிவெடி வைத்தான் வீரப்பன்.

இதில் சிக்கி ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் மரணமடைந்தார்கள். இதுபோல் மேலும் பல அட்டகாசங்கள் தொடர்ந்து கொண்டிருக்க BSF எனப்படும் எல்லைப் பாதுகாப்புப் படை (Border Security Force) வீரப்பனைப் பிடிக்கும் பணியில் ஈடுபடுவதாக முடிவானது.

1993 முதல் 1996 வரையிலான காலகட்டம் வீரப்பனுக்கு ரொம்பவும் சோதனையானது. ஒரு பக்கத்தில் தமிழக அதிரடிப்படையும் இன்னொரு பக்கம் கர்நாடக அதிரடிப்படையும் முன்றாவது திசையில் இருந்து BSF படையும் அவனைத் தேடி அலைய இதனால் காட்டுக்குள் ஏகப்பட்ட வெடிச்சத்தம். வீரப்பனின் குழுவினருக்கும் அரசாங்கப் படையினருக்கும் இடையே நடைபெற்ற சண்டைகளில் இருதரப்பிலும் ஏகப்பட்ட மரணங்கள். இதனால் அதிக இழப்பு, வீரப்பனுக்குத்தான். இதுபோன்ற பல்வேறு சண்டைகளில் வீரப்பனின் ஆள்கள் கொத்துக் கொத்தாக மரணமடைய அவனுடைய குழுவினரின் எண்ணிக்கை குறைந்துகொண்டே இருந்தது. அதே விகிதத்தில் காட்டில் அவன் சுதந்திரமாக இயங்கும் வளயமும் சுருங்கிக்கொண்டே சென்றது.


ஒரு காலத்தில் 100ற்கு மேற்பட்ட வீரர்களுடன் இருந்த வீரப்பன் படை 1996க்குப் பின் வெறும் பத்து பதினைந்து பேர் என்ற அளவில் இளைத்துவிட்டது.

இந்தக் காலகட்டத்தில் தமிழக அதிரடிப்படையின் தலைவராகப் பணியாற்றிய வால்டர் தேவாரம் மற்றும் கர்நாடக அதிரடிப்படையின் தலைவராக இருந்த சங்கர் பித்ரி ஆகியோரின் கடின உழைப்பும் அவர்களது தலைமையிலான அதிரடிப்படையினரின் தொடர்ந்த போராட்டங்களும் தான் இதை சாத்தியமாக்கியது. ஆனால் இதே சமயத்தில் தான் அதிரடிப்படை வீரர்களின் மீது பல திடுக்கிடும் குற்றச்சாட்டுக்களும் வீசப்பட்டன.

(தொடரும்)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று தேர்த் திருவிழா



### தேடி வந்தாரடி கந்தர் தேரேறி!

தேடி வந்தாரடி கந்தர் தேரேறி - எனைக்காண
பாரடியவரழகை பலகோடி சூர்யப்பிரகாசமடி சகியே!
நாடிவந்த அவர் நயனதீட்சையில் சகியே!
நானெனை இழந்தேனடி-என் நாமம் அகன்றதடி!

கண்களுடன் அவர் கண்கள் கலந்ததில்
காதல்வசமானேனடி சகியே! கதைவேறில்லையடி
கண்கொட்டாது நான் காணும் மனக்காட்சிகள்
கானல்நீராகுமோடி சகியே! என் காதல் கைகூடுமோடி

நேசமுடனவர் நேரில் நெருங்கவே-என் மார்பில்
மாலையுடன் மணநாணும் மலர்ந்ததடி சகியே!
பாசமுடனவர் பன்னிரு விழிப்பார்வையில்-என்
பந்த பாசமறுந்ததடி-பகல் வேஷம் கலைந்ததடி!

கோலக்குறத்தியை குன்றிடை வேட்டவச்
சூ(ை)ரப் பொடியர் என் உயிர்கு சுகம் தருவாரோடி!
மோதல் தணிந்து நான் மோனநிலையடைந்தேன்
முருகா! முத்தியும் தந்தாரடி! அவருடனத்துவிதமானேனடி!

*சிவப்பிரியா சோதிலிங்கம்*

### குமரா நல்லைப் பெருமானே

அருளால் உலகைத் தாங்கி வரும்
அப்பன் மகிழப் பிரணவத்தைக்
குருவாய் அமர்ந்து அருள்புரிந்த
குகனே முந்தைக் கொடிய வினை
இருளில் கிடந்து கரைகாணா
தேங்கும் பக்தர் உய்ய வருட்
குருவாய் வந்தா லாகா தோ
குமரா நல்லைப் பெருமானே

*வி.பிரான்சீஸ்*

### வாழ வழி காட்ட வா

ஈழவரின் தேசியத்தை காக்க வேண்டும்
இந்நாட்டு விலங்கதனை ஒடிக்க வேண்டும்
நாளையிங்கு தமிழராட்சி மலர வேண்டும்
நாடி வந்த பகைமுடிக்க தன்னை வேண்டும்
வேளையெல்லாம் தமிழ் மானம் காக்க வேண்டும்
வெற்றிபெற்று எம் மண்ணை ஆள வேண்டும்
வாழவழி காட்ட வா நல்லூரா
வரலாறு உன்னை வணங்கும் மறவாதே!

*தமிழானந்தபாரதி*

### வேலன் தேரினில் வருகின்றான்

குயிலும் தமிழில் இசைத்திடவே
குமரன் தேரினில் வருகின்றான்
மயிலும் தோகை விரித்தாட
மாலின் மருகன் வருகின்றான்
அடியவர் வடத்தைப் பிடித்திழுக்க
அழகன் தேரினில் வருகின்றான்
விடிவு தந்தெமைக் காத்திடவே
வேலவன் தேரினில் வருகின்றான்

*மு.முத்துக்குமார்*

### மங்காத வாழ்வு தந்தான்

தேரேறி வந்தான் நல்லூரான்
தெருவீதி கண்டான் பாராளும் மன்னரும்
படையணி வீரரும் ஊராரும் உற்றாரும்-வணங்க
உலகாள் வந்தான்

தங்கத்தை உடலிலே கொண்டான்
தரணியில் தங்காது எதுமென்று சொன்னான்
மங்காத வாழ்வு தனை வாழ
மறக்காது தனை வேண்டவும் சொன்னான்

*ஜனனி பஞ்சலிங்கம்*

### அருள் சுரந்து காத்திடுவாய்

தேரேறி வருகின்றான் முருகன் திவ்ய தரிசனம்
நாலாறு நாட்களாய் நாலு பக்க வீதியையும் தருகின்றான்
வலமாய் வருகின்றான் பக்தர் குழாம் புடை சூழ
தேரோடும் வீதியெல்லாம் ஒரு தெய்வ மணம் கமழுதையா

வாருங்கள் எல்லோரும் வடம்பிடித்து மகிழுங்கள்
ஒருங்குள் அவனருளை ஓங்கார மூர்த்தியவன்
நல்லூர்க் கந்தா! உனை நாடி வந்தோர்க்கு
அருள் சுரந்து காத்திடுவாய் அன்புமழை பொழிந்திடுவாய்

*தி.நடராஜா*

ஆற்றாரும் ஆற்றி அடுப இடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# சைவத்தமிழ் பண்பாட்டை கட்டிக்காப்போம்

இன்று நல்லூர்க் கந்தப்பெருமானின் தேர்த்திரு விழா. ஈழத்தமிழர்களின் வரலாற்றின் நிலைக்கள மாகவிளங்கும் நல்லூர்க் கந்தப்பெருமான் சமயம் கடந்த வழிபடு கடவுளாக விளங்குகின்றார்.

இலட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்று கூடி இறைவழிபாடாற்றும் அற்புதமான காட்சி நல்லூர்ப் பதியில் நடைபெறுவது ஈழத்தமிழர்கள் பெருமைப் படும் நிகழ்வாக அமைகிறது.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலங்களில் பரந்து வாழும் சைவத்தமிழர்கள் விரதம் அனுஷ்டித்து வழிபாடாற்றும் மகத்துவம் எமது பண்பாட்டின் அடையாளமாகும்.

காவடியாட்டம், கரகாட்டம், கற்பூரத்தீபம் ஏற்றல் என்ற தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களை நல்லூர் ஆலயத்தில் கண்டு களிப்புறுவது எமது பண்பாட்டை நினைவுபடுத்துவதாக அமைகின்றது.

தெய்வீகத்தோடு கலைத்துவத்தை இரண்டறக்கலந்து மனிதனை ஆற்றுப்படுத்தும் உயர் பண்பாட்டியலின் சொந்தக்காரர்கள் நாம் என்று பெருமைப்பட்டு கொள்ளவேண்டும்.

அப்போதுதான் எமது இனம், எமது சமயம், எமது மொழி என்ற பற்றுதல் மேலெழும்.

இளைஞர்கள் இறைபக்தியில் இருந்து விலகிச் செல்கிறார்கள் என்ற பரவலான கருத்திற்கு ஆப்பு வைப்பதாக நல்லூர் வீதியில் அதிகாலை வேளையில் இளைஞர்களின் பிரதட்சணம் அமைகின்றது. எத்துணை பக்தி. அந்த இளைஞர்கள் சைவத்தமிழ் பண்பாட்டை கட்டிக்காக்கின்றார்கள் என்ற உண்மையை நம் பெரியவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். அதேவேளை மாலை வேளைகளில் இளைஞர்களில் ஒருசாரார் நல்லூர் வீதியில் நடந்து கொள்ளும் விதம் வேதனை தருவதாக இருக்கின்றது. பாத அணிகள் அணிந்து மேலைநாட்டு ஆடைக் கலாசாரத்துடன் நடமாடும் அந்த இளைஞர்கள் ஏன் இவ்விதம் செய்து கொள்கிறார்கள்?

நாம் யார்? நம் இனம் எது? நமது பண்பாட்டிற்கு இருக்கக்கூடிய பெருமை எவை? என்பதை அவர்கள் அறியவும், உணரவும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது.

அதனை உணர்த்தி விடும் பொறுப்பில் இருந்து நாம் அனைவருமே விலகியிருக்கின்றோம் என்ற உண்மையை ஏற்றுத்தானாகவேண்டும்.

அதிகாலை வேளையில் 'அரோகரா' ஓசையுடன் வீதிப்பிரதட்சணம் செய்யும் இளைஞர்கள், எமது பண்பாட்டை மீறி செல்லும் இளைஞர்களை வழிப்படுத்த வேண்டும்.

அவ்வாறான வழிப்படுத்தல் இருக்குமாயின் பாதணி அணிந்து கொண்டு நல்லூர்த்திருவீதியில் நடமாடும் இளைஞர்களும் நிச்சயம் திருந்துவார்கள்.

அவர்களும் இறை வழிபாட்டில் தம்மை அர்ப்பணித்துக் கொள்வார்கள் இது உறுதி.

இருட்டைக் குறை கூறுவதை விடுத்து வெளிச்சத்தை ஏற்றுங்கள் என்ற ஆங்கிலப் பழமொழிக்கு அமைவாக சைவத்தமிழ் இளைஞர்கள் எமது பண்பாட்டை கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள் எனக் குற்றஞ்சாட்டுவதை விடுத்து தவறுசெய்கின்றவர்களைத் திருத்துவதற்கான வழிவகைகளை அமுல்படுத்துவோம்.

இது விடயத்தில் ஒவ்வொரு பெற்றோரும் விழிப்பாக இருந்தால்-தமது பிள்ளைகளின் ஆடைக்கலாசாரத்தில் கவனம் செலுத்தினால்-ஆலயத்தில் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்பதை எடுத்துக்கூறினால் திருத்தம் ஏற்படுவது உறுதியாகிவிடும்.

எமது பண்பாட்டை கடைப்பிடிப்பது எமது இனத்தின் முகவரியை பாதுகாக்கும் பணியென்ற செய்தி ஒவ்வொரு இளைஞனையும் சென்றடைய வேண்டும். அப்போது தான் ஒட்டு மொத்தமான பண் பாட்டுக் கோலத்தை நாம் காணவும் திருத்தியமைக்கவும் முடியும்.

## நல்லூர் ஆலய உற்சவத்திற்கு செல்வோர்

# மேலைத்தேய ஆடைகள், அதிக நகைகளை தவிர்த்து சைவ, தமிழ்ப் பண்பாடுகளுக்கு அமைய ஒழுகுக!

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவிற்கு வருவோர் தமிழர் பண்பாட்டைப் பேணி சைவ சமய கலாசாரத்திற்கு ஏற்ப் நடந்துகொள்ளுமாறு மக்கள் நலன்புரிச் சங்கத்தின் சீர்திருத்தப்பிரிவு துண்டுப்பிரசுரம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

இத் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"நல்லைநகர் நாவலர் பிறந்திலையேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே..." என்று சைவமும் தமிழும் ஓங்க வாழ்ந்து காட்டிய நாவலர் பெருமான் "யாழ்ப்பான கலாசாரம், கந்தபுராண கலாச்சாரம்" என்று சொல்லும் அளவுக்கு சைவமும் தமிழும் தமிழர் பண்பும் தமது உயிருக்கு நிகரென போற்றி வாழ்ந்த யாழ்ப்பாண மக்களது நிலைமாறி சினிமாவின் வெள்ளித் திரையும் தொலைக்காட்சிப் பெட்டியின் சின்னத்திரையும் எமது பண்பாட்டைக் கெடுத்தது போதாதென்று தற்போது மேலை நாட்டுப் பாணியிலான ஆடை மோகம் மலிந்து எம் ஆலயச் சூழல் அசிங்கப்பட்டு எமது கலாசாரம் சீரழிவது ஒருவருக்கும் உறைக்கவில்லையா?

வரலாற்று சிறப்புமிக்க நல்லைக்கந்தன் ஆலயத்தில் தற்போது திருட்டுக்கள், பெண்கள் மீது சேட்டை, அடிதடி போன்ற மிகவும் கீழ்த்தரமான நிலையை நோக்கியே எமது இளைய சமூகம் சென்றுகொண்டிருக்கின்றது.

முருகனின் அருளைப் பெறும் நோக்கோடு வருபவர்கள் நகைகளை தேவைக்கு அதிகமாக அணிவதைத் தவிர்த்துக் கொண்டு திருடர்களின் கைவரிசைக்கு ஆளாகாமல் உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

எமக்கென்று உயர் தனிச் செம்மொழி, மிக உன்னதமான பண்பாடு, விழுமியங்கள் உடையவர்கள் நாங்கள். பல்வேறுபட்ட விழுமியங்களை எமது முன்னோர்கள் வழிவழியே போற்றிப் பாதுகாத்து பின்பற்றியதாலேயே இன்றும் தமிழருக கென்று மதிப்பும், மரியாதையும் இருந்துகொண்டே இருக்கின்றது. இதைப் பாதுகாக்க வேண்டியது எமது சமூகத்தின் இளந்தலை முறையின் கடமையாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இளைஞர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக யுவதிகள் அநாகரிகமான (கவர்ச்சி) ஆடைகள் அணிவதைக் கட்டாயமாக தவிர்த்துக்கொள்க. இதன்மூலம வாலிபர்களின் சேட்டைக்கும், நையாண்டிகளுக்கும் உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

பெண்கள் பாதுகாப்பானதும் பண்பானதுமான சேலை, சுடிதா போன்ற ஆடைகளை அணிந்து ஆலயத்திற்கு வரும்படியும் வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க்கந்தன் ஆலய வதிகளில் தமிழர் பண்பாடு துலங்க நடந்து கொள்ளும்படியும் அவ் துண்டுப் பிரசுரத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ரு-19)

# யாழ்ப்பாண மாவட்டத்தின் இன்றைய கல்விநிலை மனவேதனை தருகிறது

## —யாழ்.அரச அதிபர்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்டத்தின் இன்றைய கல்வி நிலையைப் பார்க்கும் போது மனம் வேதனைப்படுகிறது. ஆசிரியர் அதிபர்களது அர்ப்பணிப்பான சேவை மட்டும் மாணவர்களது கல்வி நிலையை உயர்த்தப் போதாது. மாணவர்களும் மனதில் திடசங்கற்பம் கொண்டு கறறல் மற்றும் பாடசாலை செயல்பாடுகளில் முழு மனதுடன் ஈடுபடவேண்டும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டுப் பெருவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்லூரி முதல்வர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் கல்லூரியின் சுப்பிரமணியம் அரங்கில் நடைபெற்ற மேற்படி விழாவில் மங்கள விளக்கேற்றி, நூற்றாண்டு நினைவுக்கல்லையும் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றிய அரச அதிபர் தொடர்ந்தும் தனது உரையில்,

மாணவர்கள் ஆசிரியர்களை மதித்தல், கீழ்ப்படிதல், செயல்பாடுகளில் கவனம் செலுத்துதல் என்பன குறைந்து செல்லும் நிலை காணப்படுகிறது. இந்நிலை மாறி எமது பண்பாட்டின் விழுமியங்களாகிய தாய், தந்தை, குரு, பெரியோரைக் கனம் பணணும் பண்பாட்டை கட்டிக்காக்க வேண்டும். பெற்றோரும் சில தியாகங்களை தமது பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செய்ய வேண்டும் என்றார்.

சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தனது உரையில்,

மாணவர்கள் திட்டமிட்ட கல்விச் செயல்பாடுகள் மூலம் கல்வியில் முன்னேற்றம் காணாவிட்டால் இந்த நூற்றாண்டு விழாக்களால் எந்தப் பயனும் இல்லை. மாணவர்களும் திட சங்கற்பத்துடன் கல்வி கற்கவேண்டும். அண்மையில் நடைபெற்ற பொதுப்பரீட்சை ஒன்றில் கணித பாடத்தில் மூன்றில் இரண்டு பகுதி மாணவர்கள் இப் பாடசாலையில் 60க்கும் மேறபட்ட புள்ளிகளைப் பெற்றிருப்பது சந்தோசமான விடயம்.

அதேபோல் எல்லரத் துறைகளிலும் ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவையைப் பயன்படுத்தி மாணவர்கள் திட நம்பிக்கையுடன் கல்வியில் வீறுகொண்டெழுந்து மாவட்டம் பழைய கல்விநிலையை எட்ட திடசங்கற்பம கொள்ள வேண்டும் என்றார்.



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ அங்கு உரையாற்றுகையில்,

எமது மாவட்ட கல்வி நிலையில் மயக்கமான நிலை ஏற்பட்டு வருகிறது. முன்னைய முன்னேற்ற நிலைக்கு எமது மாவட்ட கல்வி நிலையை உயர்த்த எல்லாத தரப்பினரும் தூய சிந்தையோடும் அர்ப்பணிப்போடும் செயல்பட வேண்டும்.

இடர்பாடான காலகட்டங்களில் 250 ரூபாவிற்கு மண்ணெணணெய் வாங்கிப் படித்து முன்னேற்றத்தில் இருந்த எம் கல்வி நிலை இன்று சகல வசதிகளும் உள்ள போது பின்னோக்கி செல்வதற்குரிய காரணத்தைக் கண்டறிந்து அதைத் தவிர்த்து கல்வி நிலையை முன்னேற்றப்பாடுபட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் இம் மண்ணின் மைந்தன் என்ற முறையிலும் இயன்ற உதவிகளை மாணவ சமுதாயத்துக்கு ஆற்ற எப்போதும் நான் தயாராக உள்ளேன் எனவும் தெரிவித்தார்.

நூற்றாண்டு சிறப்பு மலரை வெளியிட்டு வெளியீட்டுரை ஆற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் தனது உரையில்,

இடம்பெயர்ந்து வந்த போது எம்மை அரவணைத்து பல்கலைக்கழகம் இயங்க இடம் தந்த இந்தப் பாடசாலை தானும் இடம்பெயர்ந்து இருந்தபோதும் திரும்ப வந்து தன்னை வளர்த்து பழைய மிடுக்குடன் 100ஆவது ஆண்டைக் கம்பீரமாகக் கொண்டாடுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார்.

கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. (ரு-29)

# பாதுகாப்பு குறைபாட்டு புலன்விசாரணை —வெளியாகும் முக்கிய தகவல்கள்—

(கொழும்பு)

அன்றாடக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு மேலும் ஆட்கள் தேவைப்படுவதாகக் கூறி, மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருககும் பொலிஸாரின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, வெளியுறவு அமைசசர் கதிர்காமரின் படுகொலைக்கு இரண்டு மாதங்கள் முன்னர் ஆலோசனை வழங்கியிருந்ததாக பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி நடைபெற்ற புலன்விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 14ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் பெர்னாணடோ பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் திலக் ரனவிராஜாவுடனான சந்திப்பின போது இதனை வலியுறுத்தியிருந்தார்.

மிக முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு முக்கியமானதே யென்றும் இதற்கென பெருந் தொகையானவர்கள் ஈடுபடுததப்பட்டிருப்பதால் பொலிஸாரின் சாதாரண கடமைகள் புறக் கணிக்கப்படுவதாக பொலிஸ்மா அதிபருடன் ஏழு பிரதிப் பொலிஸ அதிபர்களும் இணைந்து தெரிவித்திருந்தனர்.

மிக முக்கிய பிரமு கர்களுககான பாதுகாப்பு ஜனாதிபதி, பிரதமர், சட்டஒழுங்கு பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளியுறவு அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு வழஙகப்படுகிறது. இது பற்றிக் கருத்து தெரிவித்த பொலிஸ்மா அதிபர், மிக முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை ஏனைய கடமைகள் புறக்கணிக்கப்படாது பார்த்துக் கொளளப்பட வேண்டும் என்றார்.

புல்லாஸ் லேனில் உள்ள கதிர்காமரின் வீட்டுச் சுற்றுப்புறத்தில் சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டம் காணப்படுவதாக கறுவாத் தோட்டப பொலிஸாருக்கு அயலவர்கள் அறிவித்தாகவும், ஆயினும் நேரில் வந்து எழுத்துமூலம் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ் நிலையத்திலிருந்து பதிலளிக்கப்பட்டதாகவும் அம் முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து-6)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



மக்களின் எண்ணிக்கையோ, செல்வமோ, வறுமையோ முக்கியமல்ல. சொல், செயல் சிந்தனைகளால் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டிவைக்க முடியும். இந்த உண்மையை எப்போதும் மறந்துவிடாதீர்கள்.

சுவாமி விவேகானந்தர்



கிளிநொச்சியில் நடைபெற்ற எழுச்சி மாநாட்டில் இருந்து...

## நேரடிப்பேச்சு...

யிருந்தனர். ஆனால் அதற்கு உடன்பட மறுத்த அரசு பேச்சுக்கள் இலங்கையிலேயே நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தது. இதற்கு பதிலளித்த புலிகள் அவ்வாறாயின் பேச்சுக்களை அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சியில் நடத்த வேண்டுமென கோரியிருந்தனர். இதனைத் அரசு தற்போது முற்றாக நிராகரித்துள்ளது. (ச-4)

# எமது இறைமைக்கான போராட்டத்தை...

கிளிநொச்சி எழுச்சி மாநாட்டில் வெளியிட்ட பிரகடனத்தின் சுருக்கம் வருமாறு,

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ்பேசும் மக்களின் சனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமானகதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானதும் ஆபத்தானதுமானநிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி ஏமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

சிங்களச் சமூகம் முறையற்ற வகையில் 'பெற்றுக்கொண்ட இறைமையின் மூலம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர்.

குடியுரிமை சட்டத்தின் மூலம் இலச்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. த்னிச் சிங்கள சட்டத்தின் மூலம் மொழியுரிமையும் வேலைவாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டது. கல்வித்தரப் படுத்தல் சட்டம் மூலம் கல்வி உரிமை மறிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பன மூலம் முழுமனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்க்ளக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாடலுக்குட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ்வாறாகத் தமிழ்பேசும் மக்களாகிய நாம் வாழ்வுரிமையை இழந்திருக்கிறோம். ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் தமிழ் மண்ணையும் தமிழ் பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும் ஒரு மரபுவழிப் போரையும் நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன்மூலம் இலங்கையில் ஒரு தனித்தேசிய இனமாகத் தமிழ் மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம். இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போதும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும் இன அழிப்பும் தமிழர் தாயகத்தில்நடத்தப்பட்டன. தொடர்ந்து ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடாத்தப்பட்டன. இப்பேச்சுக்களின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்த தவறியது. இப்பேச்சுக்கள் நின்றுபோக இடைக்கால யோசனையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு முன் வைக்கப்பட்டது.

இதுபற்றியும் தொடர்ந்து பேச சிறிலங்கா அரசு முன்வராததால் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப்போயின இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ்மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புகள்யாவும் பொய்த்துப் போய்விட்டன.

தமிழ்பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும்சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபு வழி தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும்அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகிறோம் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச)

# ஒரு லட்சம் மக்கள்...

லாள்மௌலவி எஸ்.எம். சக ல், கிளிநொச்சி அரசஅதிபர் தி. இராசநாயகம், முன்னாள் யாழ். தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசன், வட்டக்கச்சி முருகன் ஆலய குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

உரைகளை தமிழீ ழ அரசியல்துறைப் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத்தலைவர் வ. விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ், கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், ச. கனகரட்ணம், சி. சிவநேசன், சே. ஜெயானந்தமூர்த்தி, க. பத்மநாதன், இரா. சம்மந்தன், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன்,

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளார், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி. மதுரநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

எழுச்சிப் பிரகடனத்தை கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணி செயலாளர் அ. வேழமாலிகிதன் வாசித்தார்.

தமிழீ ழ தேசியத் தலைவர் அவர்களிற்கான பிரகடன பிரதியினை கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற இணையத் தலைவர் இ. கணேசபிள்ளை, தமிழீ ழ அரசியல் துறைப் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களிடம் கையளித்தார்.

நிகழ்வின் இறுதியில் நன்றியுரையினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சு. பசுபதிப்பிள்ளை நிகழ்த்தினார். (ச)

## வ.பி.போ.சபையின் சேவை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை இன்று முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை தனது சேவையை இரவு 9 மணி வரை நீடித்துள்ளது.

நல்லூர் உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி இச்சேவையை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் க.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை மானிப்பாய்வீதி காங்கேசன்துறை வீதியூடாகச் செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அனைத்து பஸ்களும் குறிப்பிட்ட மூன்று தினங்களிலும் நல்லூர் வரை தனது சேவையை மேற்கொண்ட பின்னரே குறிப்பிட்ட பாதை யூடாகச் செல்லுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை காலமும் போக்குவரத்துச்சபையின் சேவைகள் இரவு 8 மணிவரை மேற் கொள்ளப் பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)


தென்னிந்தியக் கலைஞர்களின்
தவில், நாதஸ்வரக் கச்சேரி
இடம் :- காரைநகர் இந்துக்கல்லூரி- நடராஜா மண்டபம்
காலம்:- 02.09.2005 (இன்று) மாலை 6 மணிக்கு
நாதஸ்வரம்:- 'கலைமாமணி' எம்.கே.எஸ்.நடராஜன்,
எம்.கே.எஸ்.என்.மணிகண்டன்
தவில் :-'கலைமாமணி' 'தவில் சக்கரவர்த்தி' 'தவில் அரசு'
மன்னார்குடி எம்.ஆர்.வாசுதேவன்,
'தவில்சக்கரவர்த்தி'வேலூர் வெங்கடேசன் (வெங்கட்)
குறிப்பு:- நிகழ்வின் இறுதியில் கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
இந்நிகழ்வினைக்காண அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
(C-1633) காரைநகர் மக்கள்.



திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு
★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P:0777-903090, 077-3086939,0777-246117, 077-6018467
(c-9843)



நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
சத்யராஜ், நமீதா நடித்த
இங்கிலீஷ்காரன்
(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
காதல் புகழ் பரத், ரேணுகா மேனன் நடித்த
பெப்ரவரி 14
கா.நே. 11.00 2.45 6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
புரட்சிக் கலைஞர் விஜயகாந், ரம்யாகிருஷ்ணன், சாக்ஷி, பிரகாஷ்ராஜ் நடித்த
வாஞ்சிநாதன்
(சில தினங்கள் மட்டும்)
கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30
அடுத்த வெளியீடு
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டிஜெயா



சகல இந்தியன் சுவீற்ஸ் வகைகள்
ஐஸ்கிறீம், குளிர்வகைகள்.
Mangos
மரக்கறி பிரியாணி
தயிர் சாதம்
லெமன் சாதம்
பிறைட் றைஸ்
பூரி
சப்பாத்தி, குறுமா
பரோட்டா, குறுமா
மசால் தோசை
வெங்காய தோசை
பேப்பர் தோசை
நெய் தோசை
நெய் ரோஸ்ட்
சாதா தோசை
நல்லூரிற்கு வருகிறீர்களா
மாங்கோஸிற்கும் வாருங்கள்
உங்களுக்கான
அறு சுவை உணவுகள் Mangos
இல. 359/3 கோவில் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.- 021 222 8294
0777684131
இந்திய சமையல் கலை நிபுணர்களால் தயாரித்து வழங்கப்படுகிறது.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.